தினமணி

**இன்று விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம்**

First Published : 19 Mar 2010 01:02:16 AM IST

கடலூர், மார்ச் 18: கடலூர் மாவட்ட விவசாயிகள் குறைகேட்கும் கூட்டம் வெள்ளிக்கிழமை (இன்று) நடைபெறும் என்று மாவட்ட ஆட்சியர் பெ.சீதாராமன் அறிவித்தார்.

÷இதுதொடர்பாக ஆட்சியர் அண்மையில் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மாவட்ட விவசாயிகள் குறைகேட்கும் கூட்டம் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு ஆட்சியர் தலைமையில், மாவட்ட வளர்ச்சி மன்றக் கூடத்தில் நடைபெறும். கடலூர் மாவட்ட விவசாயிகள் கலந்து கொண்டு தங்களது வேளாண் சார்ந்த குறைகளையும் கோரிக்கைகளையும் தெரிவிக்க, அனைவருக்கும் வாய்ப்பு அளிக்கப்படும். எழுத்து பூர்வமாக தங்களது கோரிக்கைகளை மனுவாக வழங்கலாம்.

÷இங்கு தெரிவிக்கும் குறைகளுக்கு சம்பந்தப்பட்ட துறையின் உயர் அலுவலர்கள் உரிய பதில் அளிக்கவும், மேலும் தொடர் நடவடிக்கைகள் எடுக்கவும் மாவட்ட ஆட்சியரால் அறிவுறுத்தப்பட்டு உள்ளது. இந்த வாய்ப்பை கடலூர் மாவட்ட விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் அவர்.

**சாத்தான்குளம் வனச் சரகத்தில் மரம் வளர்ப்பது குறித்த பயிற்சி**

First Published : 19 Mar 2010 02:52:26 AM IST

சாத்தான்குளம், மார்ச் 18: சாத்தான்குளம் வனச் சரக அலுவலகத்தில் அரசு வனத் துறை வன விரிவாக்கம் மற்றம் யோகா இயற்கை நல வாழ்வு சங்கம் சார்பில் விவசாயிகளுக்கு தனியார் நிலத்தில் மரம் வளர்ப்பது குறித்து பயிற்சி மற்றும் இயற்கை மருத்துவம் பற்றிய விளக்கக் கூட்டமும் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

முகாமிற்கு மாவட்ட மரம் வளர்ப்போம் சங்கத் தலைவர் அழகேசன் தலைமை வகித்தார். ஓய்வுபெற்ற வட்டாட்சியர் தியாகராஜன், ஒய்வுபெற்ற ஆசிரியர் பொன்னம்பலம், பன்னம்பாறை இயற்கை மருத்துவர் சிவசைல விநாயகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தூத்துக்குடி சரக விளம்பர அலுவலர் மணிசுந்தரராஜன் வரவேற்றார்.

இதில் மாவட்ட மரம் வளர்ப்போர் சங்க பொருளாளர் சண்முகம், யோகா இயற்கை நல வாழ்வு சங்க மாநிலத் தலைவர் விநாயகம்,யோகா மாஸ்டர் ஜோதி தண்டாயுதபாணி, இயற்கை மருத்துவர் முருகன் உள்ளிட்டோர் பேசினர்.

முகாமில் புனித ஜோசப் கல்வியியல் கல்லூரி முதல்வர் வேணுகோபால் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முடிவில் விரிவாக்க வனவர் மார்க்கண்டகிருஷ்ணன் நன்றி கூறினார்.

**வெளிநாட்டுக்கு ஏற்றுமதியாகும் வெண்பாகற்காய்**

கம்பம்,மார்ச் 17: கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியிலிருந்து வெளிநாட்டிற்கு அதிகளவில் வெண்பாகற்காய்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன.

தேனி மாவட்டம் கம்பம், கூடலூர், சுருளிப்பட்டி, காமயகவுண்டன்பட்டி, அணைப்பட்டி, ராயப்பன்பட்டி, ஆனைமலையன்பட்டி, பூசாரிகவுண்டன்பட்டி, ஓடைப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் முன்பு திராட்சை விவசாயம் செய்து வந்தனர்.

தற்போது, திராட்சை விவசாயம் ஓய்ந்துள்ளதால், திராட்சை விவசாயத்திற்குப் பயன்படுத்தப்பட்ட பந்தல் வீணாகாத வகையில், அதே பந்தலில் வெண் பாகற்காய், பச்சை பாகற்காய், புடலை, மற்றும் கோவைக்காய் போன்ற கொடிகளை படரவிட்டு விவசாயம் செய்து வருகின்றனர்.

இங்கு விளைவிக்கப்படும் புடலை உள்ளூர் சந்தைகளிலும், கோவைக்காய் மற்றும் பச்சை பாகற்காய் கேரளம் போன்ற வெளி மாநிலத்திற்கும் வெண்பாகற்காய் சவூதி அரேபியா, துபை போன்ற வெளிநாடுகளுக்கும் அதிகளவு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இப்பகுதியில் விளைவிக்கப்படும் வெண் பாகற்காயை, மொத்த வியாபாரிகள் நேரடியாக விவசாயிகளின் விளை நிலத்திற்கே வந்து கொள்முதல் செய்து, 10 கிலோ அடங்கிய பெட்டிகளில் பேக்கிங் செய்து, நேரடியாக கொச்சி, திருவனந்தபுரம் கொண்டு செல்கின்றனர்.

பின்னர், அங்கிருந்து விமானம் மூலமும், கப்பல் மூலமாகவும் துபை, சவூதி அரேபியா போன்ற வெளிநாடுகளுக்கு வெண் பாகற்காய் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது.

இங்கு விளைவிக்கப்படும் வெண்பாகற்காய் மருத்துவக் குணம் நிறைந்துள்ளதாகவும், சத்து நிறைந்ததாகவும் உள்ளதால் வெளிநாடுகளில் இவற்றை விரும்பி உண்ணுகின்றனர்.

ஆகவே இப்பகுதி விவசாயிகள் போதுமான லாபம் கிடைப்பதால் வெண் பாகற்காய் விவசாயத்தில் அதிகளவில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

ஆரம்பநிலையில், பாகற்காய்க் கொடியைப் படரவிட்டால், 50 நாள்களிலிருந்து 5 மாதங்கள் வரை வாரம் இருமுறை காய்ப் பறிப்பு இருந்து கொண்டே இருக்கும். தற்பொழுது பாகற்காய் கிலோ ரூ. 8 முதல் ரூ.10 வரை விவசாயிகளின் விளை நிலங்களிலேயே நேரடியாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

விவசாயிகள் முழு ஆர்வத்துடன் பாகற்காய் விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுபற்றி அணைப்பட்டியைச் சேர்ந்த முத்து, அண்ணாத்துரை கூறும்போது:

கடந்த 20 ஆண்டுகளாக திராட்சை விவசாயத்தில் ஈடுபட்டு வந்தோம். 20 ஆண்டுகளுக்குப் பிறகு திராட்சை விவசாயம் ஓய்ந்துவிடும்.

அதன்பின்பு திராட்சைக்காக அமைக்கப்பட்ட பந்தல்கள் அப்புறப்படுத்த முடியாத சூழ்நிலையில், கொடிகளின் மூலம் பலன் தரும் பாவை, கோவை, புடலை போன்ற விவசாயத்தில் இப்பகுதியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகிறோம்.

இங்கு விளைவிக்கும் வெண் மற்றும் பச்சை பாகற்காய் அதிகளவு வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இதில் போதுமான லாபம் கிடைக்கிறது என்றனர்.

பாகற்காய் ஏற்றுமதி செய்யும் அனீஸ் கூறியதாவது: அரேபிய நாடுகளுக்கு பாகற்காய் அதிகளவு தேவைப்படுகிறது. கம்பம் பள்ளத்தாக்கு வெண் பாகற்காய்க்கு கிராக்கி இருப்பதால், வாரம்தோறும் விவசாயிகளிடமிருந்து அதிகளவு வாங்கி ஏற்றுமதி செய்து வருவதாகத் தெரிவித்தார்.

**பசுமைப்புரட்சியால் மண்வளம் பாதிப்பு**

உடுமலை, மார்ச் 17: பசுமைப் புரட்சி என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தி விவசாயத்தில் மண் வளத்தையும் நீர் வளத்தையும் சீரழித்து விட்டார்கள். ஆகையால் விவசாயத்தை மீண்டும் சீரமைத்தால் மட்டுமே இந்தியாவில் உணவு பற்றாக்குறையை போக்க முடியும் என்று கூறினார், இயற்கை வேளாண் விஞ்ஞானி கோ.நம்மாழ்வார்.

÷"பாலாறு வடிநில பகுதியில் சுற்றுச்சூழல் நீர் பாதுகாப்பு மற்றும் நிலைத்த வேளாண் மை' என்ற தலைப்பில், தமிழ்நாடு நீர்வள, நிலவளத் திட்டம் சார்பில் ஒரு நாள் கரு த்தரங்கு நடைபெற்றது.

÷உடுமலையை அடுத்துள்ள பூலாங்கிணறு கிராமத்தில் உள்ள செல்வம் மண் புழு பண்ணையில் புதன்கிழமை நடைபெற்ற இந்த கருத்தரங்குக்கு பொதுப்பணித் துறை கண்காணிப்பு பொறியாளர் ந.கணேசன் தலைமை வகித்தார்.

செயற்பொறியாளர் க.பன்னீர்செல்வம் முன்னிலை வகித்தார். நீர்வள ஆதாரத் துறை செயற்பொறியாளர் இரா.இளங்கேவன் கருத்தரங்கின் நோக்கம் குறித்து பேசினார்.

÷இயற்கை வேளாண் விஞ்ஞானி முனைவர் கோ.நம்மாழ்வார் கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசியது:

÷ரசாயனப் பூச்சி மருந்துகளும், களைக்கொல்லிகளும் செயற்கை உரங்களும், மண்ணில் உழவர்களின் நண்பர்களான மண்புழுக்கள், தட்டான்கள், நுண்ணுயிரிகளை அழித்து விட்டன.

÷உழவு, உணவு, உடல் நலம் ஆகிய மூன்றையும் நாம் பிரித்து பார்க்கக் கூடாது.

உணவுத் தட்டுப்பாடு மற்றும் உணவு பொருட்களின் விலையேற்றம் ஆகியவற்றுக்கு மூலகாரணம் விவசாய நிலங்கள், மக்களின் அடிப்படைத் தேவையான உணவு உற்பத்திக்கு போதுமான அளவு பயன்படாதது தான்.

÷விவசாய மேலாண்மை மற்றும் நிலப் பயன்பாட்டை முறைப்படுத்தினாலே இந்தியாவில் உணவுப் பற்றாக்குறை ஏற்படாமல் பார்த்துக் கொள்ளலாம்.

இயற்கை வேளாண்மை முறையை நமது முன்னோர்கள் சிறப்பாகக் கடைபிடித்து வந்தனர்.

ஆனால் பசுமைப் புரட்சியை அறிமுகப்படுத்தி பாரம்பரிய வேளாண்மை முறையை தகர்த்து மண் வளத்தையும், நீர்வளத்தையும் பாதிப்படையச் செய்து விட்டார்கள். உழவர்கள் தங்கள் நிலத்தில் இருந்து சமூக மாற்றத்தை இயற்கை வேளான்மை மூலம் ஏற்படுத்த வேண்டும். உடல் நலம் காக்கும் உழவு மூலம் உணவில் தன்னிறைவு அடைய வேண்டும், என்றார்.

÷செயற்கை உரங்கள் மற்றும் பூச்சிக் கொல்லிகள் மூலம் ஏற்படும் மண்வள பாதிப்பை தடுத்து நிறுத்த முடியும் என்பதை, இயற்கை விவசாயி ப.செல்வராஜ் விவசாயிகளுக்கு செயல்முறை விளக்கத்தின் மூலம் கருத்தரங்கில் விளக்கினார்.÷கோவை அக்கறை அறக்கட்டளை இயக்குனர் சி.மா.பிரிதிவிராஜ் "இன்றைய விவசாயத்தில் நெருக்கடிகள்' எனும் தலைப்பில் பேசினார்.

பொதுப்பணித் துறை உதவி செயற்பொறியாளர் ப.இளங்கோவன் நன்றி கூறினார்.

**கடலூர் மாவட்டத்தில் வீழ்ச்சியை சந்திக்கும் விவசாயம்**

த. தேவராஜ்

First Published : 19 Mar 2010 04:56:18 AM IST



கடலூர், மார்ச் 18: மின்வெட்டு, நியாயமான விலை கிடைக்காமை, நிலத்தடி நீர் மட்டம் வெகுவாகக் குறைதல் உள்ளிட்ட காரணங்களால், கடலூர் மாவட்டத்தில் விவசாயம் வீழ்ச்சியுறத் தொடங்கி இருக்கிறது.

கடலூர் மாவட்டத்தில் 5 ஆண்டுகளுக்கு முன் 3 லட்சம் ஏக்கரில் நெல், 1.15 லட்சம் ஏக்கரில் கரும்பு, 15 ஆயிரம் ஏக்கரில் வாழை, 15 ஆயிரம் ஏக்கரில் மரவள்ளிக் கிழங்கு, 1.25 லட்சம் ஏக்கரில் உளுந்து உள்ளிட்ட பயறு வகைகள், 35 ஆயிரம் ஏக்கரில் முந்திரி உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வந்தன.

கடந்த 5 ஆண்டுகளில் மேற்கண்ட பயிர்களின் சாகுபடி பரப்பளவு மெல்ல மெல்லக் குறையத் தொடங்கி இருப்பதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கிறார்கள்.

இந்த ஆண்டு நெல் பயிரிடும் பரப்பளவு 2.5 லட்சம் ஏக்கராகவும், கரும்பு 75 ஆயிரம் ஏக்கராகவும், உளுந்து மற்றும் பயறு வகைகள் 70 ஆயிரம் ஏக்கராகவும், வாழை 10 ஆயிரம் ஏக்கராகவும் மரவள்ளிக் கிழங்கு 3 ஆயிரம் ஏக்கராகவும் குறைந்து விட்டது.

கடற்கரை கிராமங்களில் கடல் நீர் உள்புகுந்து நிலத்தடி நீர் உவர் நீராகிக் கொண்டு வருகிறது. இறால் பண்ணைகளால் பல ஆயிரம் ஏக்கர் விளை நிலங்கள் கபளீகரம் செய்யப்பட்டு விட்டன.

அதே நேரத்தில் கடற்கரை கிராமங்கள் ரசாயனத் தொழிற்சாலைகளால் ஆக்கிரமிக்கப்பட்டு வருகிறது.

இதுவரை 5 ஆயிரம் ஏக்கர் விளைநிலங்கள் தொழிற்சாலை வளாகங்களாக மாற்றப்பட்டு இருக்கிறது.

தொடர்ந்து ஆலைகளுக்கு நிலம் கையகப்படுத்தும் பணி நடந்து கொண்டே இருக்கிறது. மாவட்டத்தின் மையப்பகுதிகளான பண்ருட்டி, குறிஞ்சிப்பாடி வட்டங்கள் என்.எல்.சி. சுரங்கங்களால் உறிஞ்சப்படும் கோடிக்கணக்கான லிட்டர் நீரால் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து கொண்டே போகிறது.

வறண்ட மேற்கு வட்டங்களான திட்டக்குடி மற்றும் விருத்தாசலத்தில் 30 அடியில் இருந்த நிலத்தடி நீர்மட்டம் தற்போது 70 அடிக்கும் கீழே போய்விட்டது.விருத்தாசலம், திட்டக்குடி வட்டங்களில் கடந்த இரு ஆண்டுகளாக பருவமழை பொய்த்து விட்டது. வெள்ளாற்றில் 2-வது ஆண்டாக இந்த ஆண்டு வெள்ளப்பெருக்கு ஏற்படவில்லை.இதனால் ஆயிரக்கணக்கான ஆழ்குழாய்க் கிணறுகள் வறண்டு கிடக்கின்றன.

அனைத்துக்கும் மேலாக அறிவிக்கப்படாத மின் வெட்டு விவசாயிகளை வதைத்துக் கொண்டு இருக்கிறது.

விவசாயத்துக்கு 14 மணி நேரம் மின்சாரம் வழங்க வேண்டும். ஆனால் 10 மணி நேரம் வழங்குவதாக அறிவித்து, 7 மணி நேரம்தான் வழங்கப்படுவதாக விவசாயிகள் தெரிவிக்கிறார்கள்.

**சோதனை அறுவடை**

இந்த ஆண்டு சம்பா பருவத்தில் அறுவடையின்போது, தேசிய பயிர் காப்பீட்டுத் திட்டம் மூலம் கடலூர் மாவட்டத்தில் உள்ள 13 வட்டாரங்களிலும் சோதனை அறுவடை நடத்தப்பட்டது.

இதில் காவிரி பாசனப் பகுதிகளான குமராட்சியில் ஹெக்டேருக்கு 2,473 கிலோவும், புத்தூரில் 2,268 கிலோவும், திருவக்குளத்தில் 2,927 கிலோவும் மகசூல் கிடைத்ததாகக் கணக்கிடப்பட்டு உள்ளது.

ஆழ்குழாய் கிணற்றுப் பாசன பகுதிகளான ஒரத்தூரில் 6,441 கிலோவும், கடலூரில் 5,733 கிலோவும், மங்களூரில் 5,122 கிலோவும் மகசூல் கிடைத்து உள்ளது. சராசரி விளைச்சலாக இருந்தால், ஹெக்டேருக்கு 6,500 கிலோ நெல் கிடைக்க வேண்டும் என்கிறார் பாசிமுத்தான் ஓடை விவசாயிகள் சங்கத் தலைவர் பி.ரவீந்திரன்.

தற்போதைய பயிர் காப்பீட்டுத் திட்டத்தால் பயன் இல்லை. தனிநபர் அல்லது கிராம அடிப்படையில் பாதிப்பை கணக்கிட்டு இழப்பீடு வழங்க வேண்டும், அனைத்துப் பயிர்களுக்கும் அனைத்துப் பகுதி விவசாயிகளுக்கும் காப்பீட்டுத் திட்டம் அமல்படுத்த வேண்டும் என்றும் ரவீந்திரன் தெரிவித்தார்.

""உரிய விலை கிடைக்காதது, மின் வெட்டு மற்றும் கரும்பு ஆராய்ச்சி நிலையங்களால் உயர் ரகக் கரும்புகளை அறிமுகம் செய்யாதது, விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலைகளின் ஆதரவற்ற நிலை காரணமாக கரும்புப் பயிரிடும் பரப்பளவு குறைந்ததுடன், கரும்பு மகசூல் ஏக்கருக்கு 40.5 டன்னாக இருந்தது 38 டன்னாகக் குறைந்து விட்டதாக" கரும்பு விவசாயியும் அகில இந்திய விவசாயிகள் கூட்டமைப்பின் தமிழ் மாநில பொதுச் செயலருமான விருத்தகிரி தெரிவிக்கிறார்.

திட்டக்குடி விருத்தாசாலம் தாலுகாக்களில் வெள்ளாற்றில் வெள்ளப் பெருக்கு, வெலிங்டன் ஏரிக்கு நீர் வரத்து இல்லாததால் ஆழ்குழாய்க் கிணறுகள் பல வறண்டதாலும், மின் வெட்டு காரணமாகவும், பருத்தி, மக்காச் சோளம், மரவள்ளி, சவுக்கு உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி பரப்பளவு குறைந்து, மகசூலும் வீழ்ந்து விட்டதாகக் கூறுகிறார்,

விவசாயிகள் சங்கக் கூட்டமைப்பின் கடலூர் மாவட்டச் செயலர் கார்மாங்குடி வெங்கடேசன்.வறண்டப் பகுதிகளில் மருந்துப் பயிர்கள் சாகுபடி செய்தால் நல்ல வருவாய் கிடைக்கிறது.
ஆனால் வேளாண்துறை போதிய ஆலோசனைகளும் பயிற்சிகளும் வழங்காததால், விவசாயிகள் துணிவுடன் மாற்றுப் பயிர்களுக்கு மாற முன்வர இயலவில்லை என்றும் அவர் தெரிவிக்கிறார்.

**காட்டுமல்– விவசாயிகள் தீவிரம்**

First Published : 19 Mar 2010 04:52:40 AM IST



கும்மிடிப்பூண்டி, மார்ச் 18: திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி சுற்றுவட்டாரத்தில் பல கிராமங்களில் காட்டுமல்லி சாகுபடியில் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர்.
கும்மிடிப்பூண்டியை சுற்றியுள்ள கிராமங்களான செதில்பாக்கம்,ராக்கம்பாளையம், அமரம்பேடு, தாணிப்பூண்டி, நேமலூர், ஐயர் கண்டிகை, தோக்கமூர், வழுதலம்பேடு உட்பட பல கிராமங்களில் காட்டுமல்லி பயிரிடப்பட்டு வருகிறது.
குறைந்த காலத்தில் அதிக வேலை பளு இல்லாத சூழலில், ஓரளவு லாபம் தரும் பயிராக காட்டுமல்லி இருப்பதால் இப்பகுதி விவசாயிகள் ஆர்வம் காட்டுகிறார்கள். மேற்கண்ட பகுதிகளில் உள்ள சிறு விவசாயிகள் கூட 2 சென்ட், 3 சென்ட் அளவு நிலத்தில் கூட காட்டுமல்லி பயிரிட்டு வருகின்றனர்.
ஒரு குடும்பத்தில் உள்ள 4, 5 உறுப்பினர்கள்கூட காட்டுமல்லி பயிரிட்டு காட்டுமல்லி வளர்ந்ததும் அதைப் பறித்து விற்பனைக்கு கொண்டு செல்ல போதுமானதாக உள்ளதால் வெளிநபர்களை வேலைக்கு வைக்க வேண்டிய அவசியம் இல்லாத சூழலே காட்டுமல்லி பயிரிட விவசாயிகள் அதிக ஆர்வமாக உள்ளதற்கு காரணமாக இப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.
இது குறித்து காட்டுமல்லி பயிரிட்டு வரும் செதில்பாக்கம் பகுதி எம்.ஏ. பட்டதாரி இளைஞரான ரூபனை கேட்டபோது, ""செதில்பாக்கம் பகுதியானது மண் வளம் மிக்க பகுதியாக இருப்பதால் இப்பகுதி விவசாயிகள் காட்டுமல்லி பயிரிடுவதில் மிகுந்த ஆர்வம் காட்டுகிறார்கள். காட்டுமல்லி நாற்று நட்ட 6-வது மாதத்தில் காட்டுமல்லி பூக்கத் தொடங்குகிறது.5 ஆண்டுகளாவது இந்த செடியில் இருந்து பூக்களை விவசாயிகள் பறித்து சென்னை கோயம்பேடு பூ மொத்த விற்பனை நிலையத்துக்கு கொண்டு சென்று விற்பார்கள்.

இந்த தொழிலில் ஓரளவு கிடைக்கும் லாபம் இப்பகுதி மக்களை காட்டுமல்லி சாகுபடியில் அதிக ஆர்வம் கொள்ள செய்கிறது" என்கிறார் ரூபன். இதே போன்று ராக்கம்பாளையம் பகுதியை விவசாயி பிரதாபனிடம் கேட்டபோது, ""ஆண்டில் பனிக்காலமாக 3 மாதங்களை தவிர்த்து மற்ற மாதங்களில் காட்டுமல்லி அதிக அளவு மலர்கிறது. அவ்வப்போது இந்த செடிகளுக்கு நீர் பாய்ச்சினால் நன்கு வளரக் கூடியதாக காட்டுமல்லி உள்ளது" எனக் கூறினார். மேற்கண்ட பகுதிகளில் இருந்து தினந்தோறும் அதிகாலையிலேயே பஸ்களில் பூக்கள் கோயம்பேட்டுக்கு விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகிறது. மல்லி இல்லாத காலங்களில் காட்டுமல்லி ஒரு சேர் (300 கிராம்) ரூ.60 வரை விற்று வந்ததாகவும் தற்போது மல்லி அதிக அளவு விற்பனைக்கு வந்து இருப்பதாலும் கும்மிடிப்பூண்டி சுற்று வட்டாரப் பகுதிகளில் அதிக அளவு காட்டுமல்லி வளர்ந்து விற்பனைக்கு சென்னைக்கு செல்வதால் தற்போது ஒரு சேர் (300 கிராம்) ரூ.20-க்கு விற்பதால் விலை சரிவு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் வருத்தத்துடன் தெரிவிக்கின்றனர்.

**வேதாரண்யம் பகுதியில் புகையிலை அறுவடை பணி தொடக்கம்**

First Published : 19 Mar 2010 02:45:30 AM IST

வேதாரண்யம், மார்ச். 18: நாகை மாவட்டம், வேதாரண்யம் பகுதியில் புகையிலையை அறுவடை செய்யும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

வேதாரண்யம் பகுதியில் கோடியக்காடு, கடிநெல்வயல், கருப்பம்புலம், பன்னாள், பஞ்சநதிக்குளம், மருதூர், தகட்டூர், தென்னடார், ஆயக்காரன்புலம் உள்ளிட்ட கிராமங்களில் மெல்லும் வாய்ப் புகையிலை உற்பத்தி செய்யப்படுகிறது.

இந்தப் பகுதியில் அண்மை ஆண்டுகளாக பல்வேறு காரணங்களால் புகையிலை உற்பத்தி செய்யும் நிலப் பரப்பளவு குறைந்து வந்துள்ளது.

இந்நிலையில், நிகழாண்டில் சுமார் 500 ஹெக்டேர் பரப்பில் விவசாயிகள் புகையிலை சாகுபடி செய்துள்ளனர். இது தற்போது அறுவடைக்கு தயாரான நிலையில் உள்ளது.

திடீரென மழைப் பொழிவு ஏற்பட்டால் புகையிலையில் அதன் காரத்தன்மை குறைந்துவிடும் என்பதால், அதை அறுவடை செய்து பதப்படுத்தும் பணியில் விவசாயிகள் முனைப்புக் காட்டிவருகின்றனர்.

**எண்ணெய்வித்து சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி முகாம்**

First Published : 19 Mar 2010 05:16:54 AM IST

Last Updated : 19 Mar 2010 09:13:54 AM IST

தாராபுரம், மார்ச் 18: எண்ணெய்வித்து பயிர்களுக்கான அறிவியல் தொழில்நுட்பப் பயிற்சி முகாம் மற்றும் வேளாண் கருத்தரங்கம், தாராபுரத்தில் புதன்கிழமை நடைபெற்றது.

வேளாண்துறையின் வட்டார விரிவாக்க மையம் சார்பில், குண்டடம் வட்டாரம், எரகாம்பட்டியில் நடைபெற்ற இம்முகாமுக்கு, வேளாண்துறை உதவி இயக்குநர் சி.சண்முகம் தலைமை வகித்தார். எரகாம்பட்டி ஊராட்சித் தலைவர் மயில்சாமி முன்னிலை வகித்தார்.

வேளாண் ஆலோசகர் எம்.அகமதுகபீர் தொழில்நுட்ப விரிவுரையாற்றினார். பூச்சி மற்றும் நோய்க் கட்டுப்பாடு குறித்து வேளாண் அலுவலர் எஸ்.சுப்பிரமணியம் பேசினார். எண்ணெய்வித்து பயிர்களான தென்னை, நிலக்கடலை, சூரியகாந்தி, ஆமணக்கு குறித்த விவசாயிகளின் பல்வேறு கேள்விகளுக்குப் பதில் கூறப்பட்டது.

எண்ணெய்வித்து பயிரின் சான்றிதழ் விதை உற்பத்தி குறித்து விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டன. இதில் குண்டடம் வட்டாரத்தைச் சேர்ந்த 100-க்கு மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**செம்மை நெல் சாகுபடி குறித்த பயிற்சி**

First Published : 19 Mar 2010 02:52:46 AM IST

பெரம்பலூர், மார்ச் 18: பெரம்பலூர் மாவட்டம், குன்னம் அருகேயுள்ள நல்லூர் கிராமத்தில் செம்மை நெல் சாகுபடி குறித்து விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் புதன்கிழமை நடைபெற்றது.

பெரம்பலூர் வாலிகண்டபுரம் தந்தை ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையம் சார்பில், ஆத்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு செம்மை நெல் சாகுபடி குறித்து பயிற்சியளிக்க நல்லூர் கிராமத்தில் பண்ணைப் பள்ளி அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு ஐந்து கட்டங்களாக அளிக்கப்பட்ட இந்தப் பயிற்சியில், நெல் பயிரைத் தாக்கும் பல்வேறு பூச்சிகள், நோய்களைக் கட்டுப்படுத்தும் ஒருங்கிணைந்த பூச்சி, நோய் நிர்வாக முறைகள் குறித்து, வேளாண் விரிவாக்க தொழில்நுட்ப வல்லுநர் கிருஷ்ணன், பயிர்ப் பாதுகாப்பு தொழில்நுட்ப வல்லுநர் சி. சங்கர் ஆகியோர் விளக்கினர். மேலும், பூச்சி வகைகளை கண்டறிய உதவும் சாதனங்களைக் கொண்டு நெல் வயல்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

வேளாண் உதவி அலுவலர் அய்யாசாமி, திட்ட ஒருங்கிணைப்பாளர் இரா. மாரிமுத்து மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்

**காய்கறியில் "காசு பார்க்கும்' விவசாயிகள்**

First Published : 19 Mar 2010 04:54:25 AM IST

புதுச்சேரி, மார்ச் 18: வழக்கமான சாகுபடியைக் காட்டிலும் காலத்துக்குத் தகுந்த மாதிரியான சாகுபடியில் ஈடுபட்டால் காசு கொழிக்க முடியும். இதை புதுச்சேரி விவசாயிகள் சிலர் நிரூபித்து வருகின்றனர்.

ஒரு காலத்தில் மணிலா உள்ளிட்ட சாகுபடியில் ஈடுபட்டு வந்த விவசாயிகள் பெரும்பாலும் காய்கறி சாகுபடிக்கு மாறியுள்ளனர். அறுவடைக்குத் தயாராகும் காய்கறிகளுக்கு உழவர் சந்தை பெரிய அளவில் மார்க்கெட் வசதியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

விவசாயிகள் உற்பத்தி செய்யும் காய்கறிகளையும், அதை விற்பனை செய்ய வருவோரையும் அரசு அனுப்பி வைக்கும் லாரி உழவர் சந்தையில் இறக்கி விடுகிறது. உழவர் சந்தைக்கு வரும் காய்கறிகள் உடனடியாக விற்றுத் தீர்ந்து விடுகின்றன.

வேளாண் அலுவலர்கள் ஒவ்வொரு காய்க்கும் உரிய விலையை குறிப்பிட்ட கடையில் எழுதிப் போட்டு விடுகின்றனர். அதனால் காய்கறியைக் கொடுத்துவிட்டு தினந்தோறும் காசு பார்க்கிறார்கள் விவசாயிகள். இப்போது புதுச்சேரி காமராஜர் வேளாண் அறிவியல் நிலையம் காய்கறி சாகுபடிக்காக சிறப்பு வயல்வெளி பள்ளியைத் தொடங்கி விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பங்களைச் சொல்லிக் கொடுக்கத் தொடங்கியுள்ளது.

இந்த நிலையத்தின் பூச்சியல் கட்டுப்பாட்டு நிபுணர் டாக்டர் விஜயகுமார் கூறுகையில், ""புதுச்சேரியில் திருக்கனூர், பி.எஸ்.பாளையம், வாதானூர், மதகடிப்பட்டு, நெட்டப்பாக்கம், பண்டசோழநல்லூர், காட்டேரிக்குப்பம், கீழ்அஹ்ரகாரம், அரியாங்குப்பம், மணவெளி, பூரணாங்குப்பம் ஓடைவெளி, தேங்காய்த்திட்டு, நாணமேடு உள்ளிட்ட பகுதிகளில் காய்கறி சாகுபடி செய்யப்படுகிறது.

நிறைய பேர் காய்கறி சாகுபடியில் ஈடுபட்டுள்ளது பூரணாங்குப்பம் பகுதி விவசாயிகள். இங்கு மட்டும் 50 ஹெக்டேர் நிலப்பரப்பில் நாட்டுக் காய்கறிகள்
சாகுபடி செய்யப்படுகின்றன'' என்றார்.

**நல்ல லாபம்!**

புதுச்சேரி பூரணாங்குப்பம் பகுதி விவசாயிகளிடம் காய்கறி சாகுபடி முறை எப்படி இருக்கிறது என்று கேட்டோம். விவசாயி தெ. ஆறுமுகம் (70) கூறுகையில், இப்போது சிறிய இடத்தில்தான் புடலங்காய் சாகுபடி செய்துள்ளேன். இன்றைய காலக்கட்டத்தில் காய்கறி சாகுபடிதான் லாபகரமாக இருக்கிறது. இந்த ஆண்டு ஒரு பகுதியில் மணிலா சாகுபடி செய்துள்ளேன். அதற்குக் கூலியாள்களுக்கு அதிகமாக செலவாகிறது. இனிமேல் அந்தச் சாகுபடியை நிறுத்திவிட்டு முழுவதும் காய்கறி சாகுபடியில்தான் ஈடுபடுவேன். காய்கறிகளை அறுவடை செய்வதில் பாதி வேலையை எங்கள் குடும்பத்தில் இருப்பவர்களே செய்து விடுவார்கள் என்றார்.

விவசாயி நாராயணன் (54) கூறுகையில், புடலங்காய், பாகற்காய் போன்ற சாகுபடிக்கு பந்தல் போடுவதற்குதான் அதிகமாகச் செலவாகிறது. மற்றபடி அதிகம் செலவில்லை. விவசாயத்தில் இந்தக் காலக்கட்டத்தில் லாபம் சம்பாதிக்க வேண்டுமென்றால் காய்கறி சாகுபடிதான் உகந்தது. பீர்க்கங்காய், வெள்ளரி, புடலங்காய், பாகற்காய் உள்ளிட்ட காய்கறிகளைச் சாகுபடி செய்கிறோம். புதுச்சேரி அரசு காய்கறி சாகுபடிக்கு பல்வேறு உதவிகளைச் செய்து வருகிறது. அதனால் எங்களின் காய்கறிகளை உழவர் சந்தையில்தான் விற்பனை செய்து வருகிறோம். நான் பெரிய மார்க்கெட் வியாபாரிகளுக்கு விற்பனை செய்வதில்லை என்றார்.

விவசாயி தெ. சுப்பிரமணி (58) கூறுகையில், இந்த ஆண்டு கத்தரிக்காய்க்கு நல்ல விலை கிடைத்தது. கத்தரிகாய் ஓராண்டு பயிர். எந்த நேரத்துக்கு எந்த காய்கறி சாகுபடி செய்யலாம் என்ற நுணக்கத்தை பார்த்துதான் பயிர் செய்வோம். அப்படி செய்வதால் காய்கறியில் நல்ல லாபம் கிடைக்கிறது. உழவர் சந்தைக்கு நானே எடுத்துச் சென்று வியாபாரம் செய்து வருகிறேன். இதனால் இன்னும் கூடுதல் லாபம் எனக்குக் கிடைத்து வருகிறது என்றார்.

**நல்ல "ஐடியா'**

விவசாயி மா. கிருஷ்ணமூர்த்தி (30) சொல்லும் ஒரு வித்தியாசமான விவசாய சாகுபடி உத்தியைக் கடைப்பிடித்தால் மேலும் காசு கொழிக்க முடியும்.

அவர் சொல்வது:- விநாயகர் சதுர்த்தியைக் கருத்தில் கொண்டு கம்பு, கேழ்வரகு சாகுபடி செய்வேன். அந்த பூஜைக்கு கம்பு, கேழ்வரகு போன்றவற்றை சாமிக்குப் படைப்பதற்காக நகரப் பகுதியில் அதிக அளவில் மக்கள் காசு கொடுத்து வாங்கிச் செல்வார்கள்.

கம்பு, கேழ்வரகு சாகுபடியில் கதிர்களை நசுக்கி நாம் காசு பார்ப்பதைக் காட்டிலும் கதிராகவே விநாயகர் சதுர்த்தி பூஜையின்போது வியாபாரிகளிடம் விற்றுவிட்டால் 2 மடங்கு லாபம் கிடைக்கிறது என்கிறார். மொத்தத்தில் காலத்துக்குத் தகுந்தமாதிரி காய்கறி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு நல்ல காலம் நடக்கிறது.

**உர வியாபாரிகள் கவனத்துக்கு...**

First Published : 19 Mar 2010 01:05:30 AM IST

புதுச்சேரி, மார்ச் 18: புதுச்சேரியில் உரம் விற்பனை செய்யும் சில்லறை மற்றும் மொத்த வியாபாரிகளின் உர விற்பனை உரிமம் இம்மாதம் 31-ம் தேதியுடன் காலாவதியாகிறது.

உர விற்பனையாளர்கள் தங்கள் உரிமங்களை 31.3.2010-க்குள் புதுப்பித்துக்கொள்ள வேண்டும் என்று பயிற்சிவழி தொடர்புத் திட்ட கூடுதல் வேளாண் இயக்குநர் பா.ராமகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

மேலும் காலக்கெடு முடிந்த செல்லத்தகாத உரிமங்களை வைத்துக்கொண்டு உர வியாபாரம் செய்யப்படுவது தெரியவந்தால், உரக்கட்டுப்பாடு ஆணையின் கீழ் குற்றமாக கருதப்பட்டு, அந்த உரக்கடையின் விற்பனை முடக்கப்பட்டு, அதன் உரிமையாளருக்கு தண்டனை வழங்கப்படும் என்று அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**மேட்டூர் அணை நீர்மட்டம்: 73.11 அடி**

First Published : 19 Mar 2010 02:48:43 AM IST

தஞ்சாவூர், மார்ச் 18: மேட்டூர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை மாலை 73.11 அடியாக இருந்தது.
அணைக்கு வினாடிக்கு 880 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து 1,900 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. கல்லணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

தினமலர்

**உற்பத்தி அதிகரிப்பால் வாழைப்பழம் விலை சரிவு**

கோவை : சத்தியமங்கலம், தூத்துக்குடி, கோபி பகுதிகளில் வாழைக்காய் உற்பத்தி அதிகரித்துள்ளதால், கோவையில் வாழைப்பழங்களின் விலை குறைந்தது.கோவை தடாகம் ரோட்டிலுள்ள மாநகராட்சி வாழைக்காய் மண்டியில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வாழைத்தார் விற்பனைக்கு வந்தது. இதில் பூவன் வாழைத்தார்களே அதிகமாக இருந்தன. சத்தி, தூத்துக்குடி பகுதியிலிருந்து 20 லாரிகளில் வாழைத்தார்கள் வந்தன. அதேபோல், கோபிசெட்டிபாளையத்திலிருந்தும் ஏராளமான வாழைத்தார்கள் வந்தன.பூவன் 175 ரூபாயிலிருந்து 200 வரை விலை போனது.

வழக்கமாக இவை 400 வரை விலை போகும். எங்கு பார்த்தாலும் பூவன் தாராக இருந்ததால் அதிக விலைக்கு விற்கவில்லை.கரூர் மற்றும் திருச்சியிலிருந்து ரஸ்தாளி வாழைத்தார் வந்தது. வழக்கமாக, 500 ரூபாய்க்கு விற்பவை, நேற்று 200 ரூபாயிலிருந்து 250 வரை விற்றன. மோரீஸ் 250 ரூபாய் விற்றது. செவ்வாழை வழக்கமாக 600 ரூபாய்க்கு விற்பனையாவது, நேற்று 400 ரூபாய்க்கு விற்றது.வாழைக்காய் மண்டி தலைவர் கணேசன் கூறியதாவது: வெயில் காலத்தில் வாழைப்பழங்களை சுவைப்பவர்கள் குறைவு. தாகம் தணிப்பதற்கு மற்ற பழங்களை மக்கள் நாடுவதால் வாழைப்பழங்களை சுவைப்பதை தவிர்ப்பர். அதோடு, பங்குனி மாதமாக இருப்பதால் திருமண முகூர்த்தங்களே கிடையாது. சித்திரைக்கனிக்கு தான் பழங்கள் விலை உயரும். தற்போது உற்பத்தியும் பலமடங்கு அதிகரித்துள்ளதால், விலை பல மடங்கு குறைந்துள்ளது, என்றார்.

**மண்வளம் பெருக இயற்கை விவசாயம் : விவசாயிகள் கூட்டத்தில் விளக்கம்**

பெ.நா.பாளையம்: "விவசாய நிலம் அனைத்து சத்துகளையும் பெற்று செழிக்க, இயற்கை வழி விவசாயத்தை கையாள விவசாயிகள் முன்வரவேண்டும்," என, வேளாண்மை உதவி இயக்குனர் வசந்தரேகா பேசினார்.பெரியநாயக்கன்பாளையம், புதுப்புதூரில் மண்புழு உரம் தயாரிப்பு செயல்விளக்க முகாம் நடந்தது. நிகழ்ச்சிக்கு, பெரியநாயக்கன்பாளையம் வேளாண்மை உதவி இயக்குனர் வசந்தரேகா தலைமை வகித்தார்.நிகழ்ச்சியில், வீடு மற்றும் தோட்டக்கழிவுகளை 45 நாட்கள் குவியலாக இட்டு, மட்க வைத்து, இயற்கை உரம் தயாரிக்கும் முறை குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. தொடர்ந்து ரசாயன உரங்கள், பூச்சி மருந்து பயன்படுத்துவதால் மண் வளம் குறைந்து, மண்ணில் உள்ள உயிர்கள் அழிந்து, மண் வளம் பாதிக்கப்படும். இயற்கை விவசாய முறையை கையாள விவசாயிகள் முன் வரவேண்டும்.

மண்புழு உரம் தவிர, மண்புழு வடிநீரை சேமித்து பயிர்களுக்கு தெளிப்பதால் அவை, பயிர் ஊக்கியாக செயல்பட்டு, நல்ல மகசூல் கிடைக்கும்.இவ்வாறு விளக்கம் அளிக்கப்பட்டது.முகாமில், மண்புழு வடிநீரை குழி மற்றும் தொட்டிகளில் சேமிப்பது குறித்து உதவி வேளாண்மை அலுவலர் மோகன்தாரியா பட்ஜக், ரமேஷ், செல்வராஜ் ஆகியோர் செயல்விளக்கமளித்தனர். துணை வேளாண்மை அலுவலர் தியாகராஜன் நன்றி கூறினார். நிகழ்ச்சியில், ஏராளமான விவசாயிகள் பங்கேற்றனர்.

**விவசாயிகளுக்கு வேளாண் கருவிகள்**

காரமடை: வேளாண் பொறியியல் துறை சார்பில், விவசாயிகளுக்கு வேளாண் கருவிகள் வழங்கப்பட்டன.காரமடையில் நடந்த விழாவில், வேளாண் கருவிகளை வழங்கி, கோவை அவிநாசிலிங்கம் மகளிர் பல்கலை வேந்தர் சண்முகானந்தம் பேசினார். தொடர்ந்து, மினி டிராக்டர், விசை தெளிப்பான் செயல்பாடுகள் குறித்து, வேளாண் பொறியியல்துறை பொறியாளர்கள் சந்திரசேகரன், பாண்டியன் ஆகியோர் பேசினர். விழாவில், காரமடையைச் சேர்ந்த விவசாயிக்கு மானியத்துடன் மினி டிராக்டரும், அன்னூர் விவசாயிக்கு விசைத்தெளிப்பானும் வழங்கப்பட்டது. அவிநாசிலிங்கம் வேளாண் அறிவியல் நிலைய நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் சுகந்தி நன்றி கூறினார்.

**பிளாஸ்டிக் கழிவால் பாழாகும் விளை நிலங்கள்: நிலத்தடி நீர் தட்டுப்பாட்டால் விவசாயிகள் கலக்கம்**

தர்மபுரி: தர்மபுரி மாவட்ட விளைநிலங்களில் அதிக அளவில் சமீப காலமாக பிளாஸ்டிக் கழிவுகள் சேருவதால், விளைநிலங்கள் பாழாகும் நிலை ஏற்பட்டுள்ளது. விவசாயத்தை பிரதானமாக கொண்ட தர்மபுரி மாவட்டத்தில் அதிக அளவில் மானாவாரி நிலங்கள் உள்ளன. குறிப்பாக தேசிய நெடுங்சாலையோரங்களில் அதிக அளவில் நிலங்கள் உள்ளன. ஆண்டுதோறும் பெய்யும் பருவ மழைக்கு ஏற்ப விவசாய பணிகள் சுழற்சி முறையில் நடந்து வருகிறது. நடப்பாண்டில் போதிய அளவில் பருவ மழை கைகொடுக்காத நிலையில் மாவட்டம் முழுவதும் விவசாய பணிகளுக்கு கடுமையான நீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மாவட்டத்தில் உள்ள நீர் ஆதாரங்கள் அனைத்திலும் வறண்ட நிலையும், கால்நடைகளுக்கு கூட தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. வயல்வெளிகள் மற்றும் வறண்ட நீர் ஆதாரங்களில் உள்ள புல்வெளிகளில் தற்போது, கால்நடைகள் மேய்ச்சல் நிலமாக மாறியிருப்பதால், தற்போதைக்கு கால்நடைக்கு தேவையான தீவன தட்டுப்பாடுகள் அதிக அளவில் இல்லாமல் உள்ளது.

இருப்பினும், வரும் காலங்களில் நீர் ஆதாரங்களில் வறட்சி காரணமாக கால்நடைகளுக்கு தேவையான தண்ணீர் மற்றும் தீவனங்கள் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளது. மாவட்டம் முழுவதும் நிலத்தடி நீர் மட்டமும் கேள்விக்குறியாகியுள்ளதால், விவசாய பணிகள் பெரும் அளவில் பாதிக்கப்பட்டுள்ளது. மாசி பட்டத்தில் பல இடங்களில் விவசாயிகள் நிலங்களில் எந்த பயிரும் சாகுபடி செய்யாத நிலையில், சாலையோரங்களில் உள்ள நிலங்களில் அதிக அளவில் பிளாஸ்டிக் கழிவுகள் காற்றில் பறந்து நிலங்கள் முழுவதும் பரவி வருகிறது. குறிப்பாக சாலையோரங்களில் குவியலாக கொட்டப்படும் பிளாஸ்டிக் கவர்கள் காற்றில் பறந்து விளை நிலங்கள் முழுவதும் பரவி விடுகிறது. இதனால், மழை பெய்யும் போது விவசாய நிலங்களில் நிலத்தடி நீர் தங்குவது அரிதாகி வருகிறது. மாவட்டத்தில் விவசாய நிலங்களில் பரவிக்கிடக்கும் பிளாஸ்டிக் கழிவுகளால் வரும் நாட்களில் நிலத்தடி நீர் பாதிப்பு ஏற்படும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக காரிமங்கலம், பாலக்கோடு, பென்னாகரம், பாப்பிரெட்டிப்பட்டி, தர்மபுரி ஆகிய சாலையோரங்களில் உள்ள விவசாய நிலங்கள் அனைத்திலும் பிளாஸ்டிக் கவர்கள் நிலங்களில் மண்ணில் கிடப்பதால், நிலத்தில் நிலத்தடி நீர் தங்குவது கேள்விக்குறியாகி வருவதால் விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர். இது குறித்து பழைய தர்மபுரியை சேர்ந்த விவசாயி கோவிந்தன் கூறும் போது,"பஸ் மற்றும் வேன்களில் வரும் பயணிகள் தாங்கள் கொண்டு வரும்

பொருட்களை பயன்படுத்தி விட்டு, வெளியில் தூக்கி ஏறியும் பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் சாலையோரங்களில் கொட்டப்படும் கழிவுகளும் விளை நிலங்களில் மண்ணொடு கலந்து மாசு தன்மை ஏற்பட்டு வருகிறது. நிலம் மாசுப்படுவதை தடுக்க தனி நபர்கள் இது போன்ற கவர்களை பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும்," என்றார்.

பிளாஸ்டிக் கழிவுகளால் நில, நீர் மாசு குறித்து பல்வேறு விழிப்புணர்வுகள் செய்த போது, விளை நிலங்களில் கொட்டப்படும் கழிவுகளால் எதிர்காலத்தில் நிலத்தடி நீருக்கு பெரும் ஆபத்தை உருவாக்கும் என்பதால், பொதுமக்கள் பிளாஸ்டிக் கவர்களை நிலங்களில் வீசுவதை நிறுத்த வேண்டும்.

**புதிய அரிசி வரத்து குறைவு: கம்பு, சோளத்துக்கு வரவேற்பு**

ஈரோடு: ஈரோடு அக்ரஹாரம் அரிசி சந்தையில் வெயில் காரணமாக கம்பு, சோளம் விற்பனை சூடுபிடித்துள்ளது. ஒரு கிலோ கம்பு 12 ரூபாய், சோளம் 20 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. நெல் அறுவடை முடிந்ததால் அரிசி விலை இனி ஏறுமுகமாக இருக்கும் என வியாபாரிகள் தெரிவித்தனர். ஈரோடு அக்ரஹாரம் அரிசி சந்தைக்கு, சில வாரங்களுக்கு முன் புது அரிசி வரத்தானபோது விலை கிலோவுக்கு ஐந்து ரூபாய் வரை குறைந்தது. நெல் அறுவடை முடிந்ததால், அரிசி வரத்து சீராக உள்ளது. சென்ற இரு வாரங்களாக அரிசி சந்தைக்கு 5,000 மூட்டை வரை வரத்தாகிறது. அரிசி விலையில் மாற்றம் இல்லாமல் உள்ளது. இனி வரும் காலங்களில் வறட்சி காலமாக இருப்பதாலும், நெல் அறுவடை பணி நடக்காது என்பதாலும் அரிசி விலை உயரும் என வியாபாரிகள் தெரிவித்தனர். நேற்றைய நிலவரப்படி அரிசி மார்க்கெட்டில் கர்நாடக டீலக்ஸ் பொன்னி பழையது 75 கிலோ மூட்டை 2,500 முதல் 2,650 ரூபாய், புதியது 2050 ரூபாய் முதல் 2,150 ரூபாய், பி.பி.டி., பழையது 2,200 ரூபாய், புதியது 1,750 ரூபாய், அதிசய பொன்னி பழையது 1,750 ரூபாய், புதியது 1,500 ரூபாய், கோ 36 ரகம் பழையது 1,650 ரூபாய், புதியது 1,500 ரூபாய், கோ 43 ரகம் 1,250 ரூபாய் முதல் 1,350 ரூபாய், ஐ.ஆர்.20 ரகம் 1,400 ரூபாய் முதல் 1,450 ரூபாய், இட்லி அரிசி 1,500 ரூபாய், கல்சர் இட்சி அரிசி 1,450 ரூபாயக்கு விற்கப்படுகிறது.

அரிசி வியாபாரிகள் சங்க செயலாளர் மற்றும் மொத்த வியாபாரி கந்தசாமி கூறியதாவது: தமிழகம் முழுவதும் நெல் அறுவடை பணி முடிந்துள்ளது. அரவை செய்யப்படும் அரிசி மட்டுமே மார்க்கெட்டுக்கு வரத்தாகிறது. நெல் அறுவடை முடிந்ததால் அரி மார்க்கெட்டுக்கு இனி அதிகளவில் அரிசி வரத்தாகாது. சென்ற சில வாரங்களுக்கு முன் அரிசி மார்க்கெட்டுக்கு புதிய அரிசி வரத்தானபோது அரிசி விலை குறைந்தது. வரும் காலங்களில் அரிசி வரத்து அதிகரிக்காது என்பதால் குறைய வாய்ப்பில்லை. அதிகரிக்கவே வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் கூறினார். அரிசி மார்க்கெட்டில் பின்புற பகுதியில் கம்பு, சோளம் விற்கப்படுகிறது. ஈரோடு மாவட்டத்தில் சில நாட்களாக 97 டிகிரி வரை வெயில் கொளுத்துவதால், குளிர்ச்சி தரும் பொருள்கள் விற்பனை ஜோராக உள்ளது. கூழ் தயாரிக்க பயன்படும் கம்பு, சோளம் ஆகியவை விற்பனை நன்றாக உள்ளது. ஒரு கிலோ கம்பு 12 ரூபாய்க்கும், சோளம் 15 ரூபாய் முதல் 20 ரூபாய் வரையும் விற்கப்படுகிறது. இது தவிர தினை, கேழ்வரகு ஆகியவையும் இங்கு விற்பனையாகிறது.

---

**தேங்காய் நேரடி கொள் முதல் செய்ய எம்.பி., நடவடிக்கை**

ஈரோடு: 'விவசாயிகளிடம் இருந்து தேங்காயை நேரடியாக கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது' என ஈரோடு எம்.பி., கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார். அவரது அறிக்கை: கேரளாவை மிஞ்சும் வேகத்திலும் தமிழகத்தில் தென்னை விவசாயம் பெருகி வருகிறது. பல்வேறு புறச்சூழல்களால் வெளிச் சந்தையில் தேங்காய்க்கு உரிய விலை விவசாயிகளுக்கு கிடைக்காத காரணத்தால், தென்னை விவசாயம் பெரிய பாதிப்புக்கும், அழிவுக்கும் உள்ளாகியுள்ளது.

மத்திய அரசின் இந்திய தேசிய விவசாய கூட்டுறவு சந்தை இணையம் மூலம் கொள்முதல் செய்வது மிகவும் குறைவாகவே உள்ளது. கொள்முதல் செய்யப்படும் பருப்பில் ஈரப்பதம் அதிகம், நிறம் சரியில்லை போன்ற பல காரணங்களை சொல்லி கொள்முதல் மறுக்கப்படுகிறது. இக்குறையை தவிர்க்க விவசாயிகளிடம் இருந்து உரிதேங்காய் நேரடியாக கொள்முதல் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை லோக்சபாவில் நானும், பொள்ளாச்சி எம்.பி., சுகுமாரும் பேசினோம். உரிய நடவடிக்கை எடுக்க வேளாண் துறை அமைச்சர் உறுதி வழங்கினார். டில்லியில் உள்ள இந்திய தேசிய விவசாய கூட்டுறவு சந்தை இணைய நிர்வாக இயக்குனர் ஆனந்த்போஸை சந்தித்து வலியுறுத்தினோம். கோரிக்கையை ஏற்ற அவர், சென்னை கிளை மேலாளருக்கு விவசாயிகளிடம் இருந்து உரிதேங்காயை நேரடியாக நிர்ணயித்துள்ள விலைக்கே கொள்முதல் செய்ய உத்தரவிட்டார். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**பால் விலை உயர்த்த கோரும் விவசாயிகள்**

ஈரோடு: தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் நலச்சங்க மாவட்ட பொதுக்குழு கூட்டம் ஈரோட்டில் நடந்தது. வைக்கோல், சோளத்தட்டு மற்றும் இதர உலர் தீவனம் விலை உயர்ந்துள்ளது. ஆட்கள் பற்றாக்குறையால், கூலியும் உயர்ந்துள்ளது. எனவே, ஒரு லிட்டர் பசும்பாலுக்கு ஐந்து ரூபாயும், எருமை பாலுக்கு ஐந்து ரூபாயும் கொள்முதல் விலையை உயர்த்தி தர வேண்டும். இதுபற்றி, பால் கொள்முதல் விலையை நலச்சங்க உறுப்பினர்களை அழைத்து பேசி, வரும் சட்டசபை கூட்டத் தொடரிலேயே அரசு உயர்த்தி அறிவிக்க வேண்டும். ஆவின் கால்நடைத் தீவனம் 50 சதவீத மானியத்தில் வழங்க வேண்டும். கூட்டுறவு சங்கங்கள் வாங்கும் பாலுக்கு லிட்டருக்கு இரண்டு ரூபாய் ஊக்க விலை கொடுக்க வேண்டும். இதற்கான நிதியை பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்பன உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**நுங்கு விற்பனை கோபியில் மும்முரம்**

கோபிசெட்டிபாளையம்: கோடைகாலத்தை முன்னிட்டு கோபியில் நுங்கு விற்பனை களை கட்டத் துவங்கியுள்ளது. கோடை வெயில் கொளுத்தும் நிலையில், இளநீர், தர்ப்பூசணி, நுங்கு, கம்பங்கூழ், வெள்ளரிக்காய் போன்ற நீர்ச்சத்து அதிகமுள்ள உணவுப் பொருட்களை பொதுமக்கள் விரும்பி சாப்பிடுகின்றனர். கோபி, நம்பியூர் மற்றும் டி.என்.பாளையம் பகுதிகளில் பனை மரங்கள் அதிகம் உள்ளன. பனை மரத்தில் கள் இறக்க தடை விதிக்கப்பட்டுள்ளதால், விவசாயிகள் நுங்கை அதிகம் உற்பத்தி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. போதிய மழை இல்லாததால் கோபி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் நுங்கு உற்பத்தி குறைந்து விட்டது. இதனால், நுங்கு விலையும் உயர்ந்துள்ளது. கோடை காலத்தில் உடலில் ஏற்படும் வியர்க்குரு பாதிப்பை சமாளிக்க நுங்கில் உள்ள நீரை பொதுமக்கள் உடலில் பூசுவது வழக்கம். இதனால் நுங்குக்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளது. கோபியில் கடந்தாண்டு 50 பைசாவுக்கு விற்கப்பட்ட நுங்கு தற்போது ஒரு ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

**விதை கிராம திட்ட பயிற்சி விவசாயிகள் பங்கேற்பு**

குளித்தலை: குளித்தலை அடுத்துள்ள தோகமலை வெள்ளப்பட்டி கிராமத்தில் விதை கிராம திட்டத்தின் கீழ் பயறுவகைகளுக்கான விவசாயிகளுக்கான பயிற்சி நடந்தது. முன்னோடி விதை பண்ணை விவசாயி கோவிந்தராசு தலைமை வகித்தார். தோகமலை வட்டார வேளாண் அலுவலர் காதர் மொஹைதீன் அனைவரையும் வரவேற்றார். அரசின் பல்வேறு வேளாண் மானிய திட்டங்கள் குறித்து பேசினார். பயறுவகை சாகுபடி தொழில் நுட்பங்கள் மற்றும் விதைப்பண்ணை அமைத்தல் பற்றி பயிற்சி அளித்தார்.

தோகமலை வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் சிந்தாமணி அரசின் பல்வேறு தோட்டக்கலை மானிய திட்டம் மற்றும் சொட்டு நீர் பாசனத்தின் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளிடம் பேசினார். வேளாண் துணை அலுவலர் கண்ணதாசன், இயற்கை வேளாண் தொழில்நுட்பம் மற்றும் மண்புழு உரத்தின் முக்கியத்துவம் குறித்து பேசினார். பயிற்சியில் முன்னோடி விவசாயிகள் அருணாசலம் உள்பட ஐம்பதுக்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர். உதவி வேளாண் அலுவலர் மாணிக்கவாசகம் நன்றி கூறினார்.

**விவசாய தொழிலாளர் சங்க ஒன்றிய மாநாடு**

ஆவுடையார்கோவில்: ஆவுடையார்கோவிலில் அகில இந்திய விவசாய தொழிலாளர்கள் சங்க ஒன்றிய மாநாடு நடந்தது.சபரிநாதன் தலைமை வகித்தார். மாநிலக்குழு உறுப்பினர் உடையப்பன் மாநாட்டை தொடங்கி வைத்தார். ஒன்றிய பொறுப்பாளர் வீரையா, சிஐடியு மாவட்ட செயலாளர் செல்வராஜ், விவசாய சங்க மாவட்ட செயலாளர் பொன்னுச்சாமி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றிய செயலாளர் சுப்பிரமணியன் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.மாநாட்டி நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: ஆவுடையார்கோவில் ஒன்றியத்தில் குடிமனை இல்லாத அனைவருக்கும் பட்டா வழங்க வேண்டும், மகாத்மாகாந்தி வேலை உறுதி சட்டத்தை ஒன்றியத்தில் அனைத்து பகுதிகளிலும் அமல்படுத்தி மண்கூடை சுமக்கும் தொழிலாளர்களுக்கு கூலியை குறைக்காமல் வழங்க வேண்டும், நலத்திட்ட உதவிகளை வயது முதிர்ந்த விவசாய தொழிலாளர்களுக்கு காலத்தை கடத்தாமல் அறிவித்தபடி ரூ.400ஐ முறையாக அரசு வழங்க வேண்டும், ஆவுடையார்கோவில் ஒன்றியத்தை மிகவும் வறட்சி பகுதி என்று அறிவித்து அரசு திட்டங்களை முன்னுரிமை கொடுத்து குடிநீர் தட்டுப்பாட்டை போக்க வேண்டும், சாலை வசதி, தெரு விளக்கு, மயானசாலை போன்ற அடிப்படை வசதிகளை நிறைவேற்ற வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**விளாத்திகுளம் பகுதியில் மிளகாய் பழம் பறிக்கும் பணி தீவிரம் : மகசூல் குறைவால் விவசாயிகள் கவலை**

விளாத்திகுளம்: விளாத்திகுளம் பகுதியில் மிளகாய் பழம் பறிக்கும் பணி தீவிரமடைந்துள்ளது. போதிய மகசூல் இல்லாததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.
விளாத்திகுளம் தாலுகாவில் மானாவாரி நிலங்களிலும், இறவை பாசனங்களிலும் மிளகாய் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. விளாத்திகுளம் தாலுகாவில் சுமார் 18 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் மிளகாய் சாகுபடி செய்யப்படுகிறது. தென் மாவட்டங்களிலேயே விளாத்திகுளம் தாலுகாவில் தான் அதிகளவில் மிளகாய் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இப்பகுதியில் உள்ள விவசாயிகள் மிளகாய் சாகுபடியை நம்பியே வாழ்க்கை நடத்தி வந்த காலம் படிப்படியாக ஆட்டம் கண்டுள்ளது. இப்பகுதியில் போதிய மழை பெய்யாததாலும் மணல் கொள்ளையினாலும் கடந்த 10 ஆண்டுகளாகவே மிளகாய் சாகுபடி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டும் பருவமழை காலம் தவறி பெய்ததாலும், மணல் கொள்ளையினாலும் மிளகாய் சாகுபடி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. எப்போதும் இல்லாத அளவுக்கு இந்த ஆண்டு மிளகாய் சாகுபடி மிகவும் வீழ்ச்சி அடைந்துள்ளது. ஒரு ஏக்கருக்கு 7 முதல் 10 குவிண்டால் வத்தல் சாகுபடி செய்த காலம் மாறி இந்த ஏக்கருக்கு ஒரு குவிண்டால் வருவதே

ஆச்சரியம்தான். இதனால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த ஆண்டு மகசூல் குறைவான சோகத்தில் ஆங்காங்கே தென்படும் மிளகாய் பழங்களை பறித்து உலர்த்தும் பணியில் தீவிரமாக விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். இனிவரும் காலங்களில் மிளகாய் சாகுபடி செய்வது மிகவும் குறைந்து விடும் என்பது இப்போதே தெரிகிறது.

**விவசாயிகளுக்கு எண்ணெய் பனை சாகுபடி பயிற்சி**

திருநெல்வேலி:பாளை., வேளாண் வட்டாரம் உழவர் பயிற்சி நிலையத்தில் ஐசோபாம் எண்ணெய் பனை திட்டத்தின் கீழ் எண்ணெய்பனை சாகுபடி குறித்தான விவசாயிகள் பயிற்சி (கடந்த 10 மற்றும் 11ம் தேதிகளில்) நடந்தது.வேளாண் உதவி இயக்குனர் வெள்ளைப்பாண்டி வரவேற்றார். தேர்வு செய்யப்பட்ட விவசாயிகள் அனைவரும் எண்ணெய் பனை கன்றுகள் உற்பத்தி செய்யப்படும் வெள்ளாளங்குளம் கிராமத்திற்கு வயல் வெளிப் பயிற்சிக்கு அழைத்து செல்லப்பட்டு எண்ணெய் பனை கன்றுகள் பராமரிக்கும் விதம் மற்றும் நடவு முறைகள் நேரிடையாக காண்பிக்கப்பட்டது.

இரண்டாம் நாள் பயிற்சிக்கு மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சுப்பிரமணியன் தலைமை வகித்தார். திருநெல்வேலி மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர் தேவசகாயம் முன்னிலை வகித்தார். காட்ரெஜ் நிறுவன பிரதிநிதி நடராஜன் தொழில் நுட்பங்களை எடுத்துக் கூறினார்.குருந்துடையார்புரம் மற்றும் சிவந்திப்பட்டி டான்வாப் பண்ணை மகளிர் குழு ஒவ்வொன்றுக்கும் செம்மை நெல் சாகுபடிக்கான வேளாண் கருவிகள் வழங்கப்பட்டன. மேலும் ஆத்மா திட்டத்தின்கீழ் கால்நடைத் துறை சார்பில் சிறந்த விவசாயி ராஜவல்லிபுரம் முருகன் என்ற விவசாயிக்கு 4 ஆயிரம் ரூபாய் பரிசுத் தொகைக்கான செக்கை வேளாண் இணை இயக்கனர் வழங்கினார். பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை வழங்கப்பட்டது.ஏற்பாடுகளை வேளாண்மை அலுவலர்கள் சிவக்குமார், ஞானதீபா, வேளாண்மை உதவி அலுவலர்கள் பரமசிவன், ராமச்சந்திரன், மற்றும் ஹென்றி ராஜேஷ் ஆகியோர் செய்தனர்.

**தென்காசியில் வாழைத்தார் விற்பனை மைய ஆலோசனை கூட்டம்**

தென்காசி:தெனகாசியில் வாழைத்தார் விற்பனை மைய ஆலோசனை கூட்டம் நடந்தது.தென்காசி, செங்கோட்டை தாலுகா வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் சார்பில் கடந்த 2005ம் ஆண்டு ஜூலை மாதம் தென்காசியில் வாழைத்தார் விற்பனை மையம் துவக்கப்பட்டது. தற்போது இங்கு வாரத்தில் திங்கள் மற்றும் வெள்ளி கிழமையில் வாழைத்தார் பொது ஏலத்தில் விடப்படுகிறது. அதிக விலைக்கு கேட்கும் வியாபாரிகளுக்கு ஏலத்தார் விற்பனை செய்யப்பட்டு கமிஷன் இன்றி விற்பனை தொகை முழுவதும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.வாழைத்தார் விற்பனை மையத்திற்கு விவசாயிகள், வியபாரிகள் ஆதரவு அதிகமாக இருப்பதால் கடையநல்லூரில் புதிதாக வாழைத்தார் விற்பனை மையம் அமைக்க முடிவு செய்யப்பட்டது. இதன்படி கடையநல்லூரில் வரும் 25ம் தேதி வாழைத்தார் விற்பனை மையம் துவக்கப்படுகிறது. வியாழன் தோறும் இங்கு வாழைத்தார் ஏலம் நடக்கும்.இதுகுறித்த ஆலோசனை கூட்டம் தென்காசியில் நடந்தது.

கூட்டத்திற்கு கூட்டுறவு துணை பதிவாளர் வானதி தலைமை வகித்தார். சார்பதிவாளர்கள் சாந்தி, ராஜன் முன்னிலை வகித்தனர். கள அலுவலர் ராஜா வரவேற்றார். வேளாண்மை அலுவலர் விஸ்வநாதன், உதவி விதை அலுவலர் சண்முகசுந்தரம், இயக்குநர் செந்தில்குமார், முதுநிலை ஆய்வாளர்கள் சிவராமன், கலா கருத்துரை வழங்கினர்.நிகழ்ச்சியில் கணக்கர் வேலுச்சாமி, காசாளர் சுப்புராஜ், எழுத்தர்கள் மாரிமுத்து, அழகுசுந்தரம், சாமி, சங்கரானந்தம், ஐயப்பன், கண்ணன், முத்துவேல், ஆறுமுகம் மற்றும் வாழை விவசாயிகள், வியாபாரிகள் உட்பட திரளானோர் கலந்து கொண்டனர்.

**ஆள் பற்றாக்குறையை போக்க அகன்ற பாரில் நடவு செய்யுங்கள் :கரும்பு விவசாயிகளுக்கு அதிகாரி வேண்டுகோள்**

திருப்பத்தூர்:ஆள் பற்றாக்குறையை போக்க அகன்ற பாரில் கரும்பு நடவு செய்ய வேண்டும் என விவசாயிகளுக்கு கோட்ட கரும்பு அலுவலர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

விவசாய தொழிலாளர்களின் பற்றாக்குறையை சமாளித்து இயந்திரத்தை பயன்படுத்தி கரும்பை அகல பாரில் நடவு செய்வதால் கிடைக்கும் கூடுதல் பலன்கள் பற்றி செயல் விளக்கம் செய்து காண்பிக்க கூட்டுறவு சர்க்கரை அதிகாரிகளுக்கு திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை தனி அலுவலர் கணேஷ் உத்தரவிட்டுள்ளார். அதன்படி திருப்பத்தூர் மேற்கு கோட்டம் மோகன் என்பவரின் நிலத்தில் அகல பார் மூலம் கரும்பு நடவு என்ற தலைப்பில் செயல் விளக்கமும் வயல் விழாவும் நடந்தது.

வயல் விழாவில் ஆலையின் கரும்பு அபிவிருத்தி அலுவலர் வெங்கடசாமி தலைமை வகித்து, அனைத்து சாகுபடி முறைகளையும் கடைபிடித்து கரும்பில் அதிக மகசூல் எடுத்திட வேண்டும் என கேட்டுக்கொண்டார். கோட்ட கரும்பு அலுவலர் வெற்றிவேந்தன் பேசியதாவது:

விவசாயத்திற்கு பெரும் தடைக்கற்களாக இருப்பது விவசாய தொழிலாளர்களின் பற்றாக்குறை மற்றும் நீர் பற்றாக்குறை. கரும்பு சாகுபடிக்கு தேவைப்படும் விவசாய தொழிலாளர்களின் எண்ணிக்கையை குறைத்திட அகலப்பார் மூலம் கரும்பு நடவு செய்திட வேண்டும். இதற்காக 4 அடி அகலப்பார் அமைத்து கரும்பு நடவு செய்ய வேண்டும். அகலபாரில் நடவு செய்யும்போது பவர் டில்லர் மூலம் களை எடுப்பது மண் அணைப்பது போன்றவற்றை செய்து சாகுபடி செலவினங்களை குறைக்கலாம்.

அகலப்பாரில் கரும்பு நடவு செய்வதால் விதைக்கரும்பின் தேவையில் 40 சதவீதம் குறைக்கலாம். அகலப்பார் கரும்பு நடவில் உளுந்து, காராமணி, சோயா மொச்சை போன்றவற்றை ஊடுபயிராக பயிர் செய்து கூடுதல் லாபம் பெறலாம். மற்றும் 7ம் மாதங்களில் சோகை உரிப்பதும் 7மற்றும் 9ம் மாதங்களில் விட்டம் கட்டுவதும் எளிதாகும். சூரிய ஒளியும், காற்றோட்டமும் அகலப்பார் நடவில் அதிக அளவில் கிடைக்கின்ற காரணத்தால் தனிக் கரும்பின் எடை அதிகரித்து அதிக மகசூல் கிடைக்கிறது.

நோய் மற்றும் பூச்சி தாக்குதலை கண்காணிப்பதும், கட்டுப்படுத்துவதும் அகலப்பார் நடவில் எளிதாகும்.அகலப்பாரில் கரும்பு நடவு செய்வதால் அறுவடை இயந்திரன் மூலம் அறுவடை செய்யமுடியும், இதனால் தொழிலாளர்களின் பற்றாக்குறையை ஈடுசெய்யப்படுவதோடு சாகுபடி செலவினமும் குறைந்து விவசாய அங்கத்தினர்கள் கூடுதல் லாபம் பெறமுடியும். அதிக எண்ணிக்கையில் மறுதாம்பு விடலாம். இவ்வாறு கோட்ட கரும்பு அலுவலர் வெற்றிவேந்தன் பேசினார்.

கரும்பில் அதிக மகசூல் எடுப்பதற்கான தொழில் நுட்ப கருத்துகளை காக்கங்கரை பிரிவு கரும்பு உதவியாளர் குமார் எடுத்துக்கூறினார். கரும்பில் விதை நேர்த்தி செய்வது பற்றிய செயல் விளக்கத்தினை மேற்கு வட்ட கரும்பு பெருக்கு உதவியாளர் சந்திரபோஸ் செய்து காட்டினார். உதவியாளர் ராமலிங்கம் நன்றி கூறினார்.நிகழ்ச்சியில் வெங்களாபுரம் அனேரி, பால்னாங்குப்பம், கவுண்டப்பனூர் ஆகிய கிராமங்களை சேர்ந்த கரும்பு விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**விளைச்சலை அதிகரிக்கதுல்லிய பண்ணை திட்டம்**

உடுமலை: உடுமலை அருகே உள்ள குரல்குட்டையில் கோவை வேளாண் பல்கலை சார்பில் நீர்வள நிலவள திட்டத்தில் துல்லிய பண்ணை திட்ட கருத்தரங்கு நடந்தது; ஊராட்சி தலைவர் பன்னீர்செல்வம் தலைமை வகித்தார்.வேளாண் பல்கலை நீர்நுட்ப மைய பேராசிரியர் மாணிக்கசுந்தரம் பேசியதாவது:விளைநிலத்தில் தண்ணீர் தேவையை குறைத்து, விளைச்சலை அதிகரிக்க துல்லிய பண்ணை திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

நீர்வள நிலவள திட்டத்தில் பல்கலை சார்பில் கடந்தாண்டு உடுமலை பகுதியில் 25 எக்டேரில் காய்கறி பயிர்களும், 40 எக்டேரில் தென்னை சாகுபடி, நான்கு எக்டேரில் வாழைக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது.மானியத்தில் 60 சதவீதம் சொட்டு நீர் பாசனம் அமைக்கவும், பிற இடுபொருட்களும் வழங்கப்படுகிறது. துல்லிய பண்ணை திட்டத்தை பயன்படுத்தும் விவசாயிகள் நல்ல லாபம் பெறுகின்றனர், என்றார்.இணை பேராசிரியர் ரவிக்குமார், காய்கறி பயிர்களுக்கு சொட்டு நீர் பாசன முறையில் ஏற்படும் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பது குறித்து பேசினார். துணை பேராசிரியர் செல்வக்குமார், முதுநிலை ஆராய்ச்சியாளர் கலாமணி உட்பட பலர் பேசினர். துல்லிய பண்ணை திட்டத்தில் தக்காளி பயிரிட்டுள்ள நிலத்தில் விவசாயிகளுக்கு நேரடி விளக்கம் அளிக்கப்பட்டது.

**பருத்தி வரத்து அதிகரித்தது; ரூ.70 லட்சத்துக்கு வர்த்தகம்**

அவிநாசி: அவிநாசியில் நடந்த பருத்தி ஏலத்துக்கு வரத்து அதிகரித்திருந்தது.அவிநாசி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த பருத்தி ஏலத்துக்கு 6,000 மூட்டை வரத்தாக இருந்தது. இது, கடந்த வாரத்தை காட்டிலும் 500 மூட்டை அதிகம். வரத்து அதிகரித்துள்ள நிலையில் , டி.சி.எச்., ரகம் கடந்த வாரத்தை காட்டிலும் குவிண்டாலுக்கு ரூ.50 குறைந்தும், ஆர்.சி.எச்., பென்னி ஆகிய ரகங்கள் ரூ.70 அதிகரித்தும் காணப்பட்டது.

இந்த வார ஏலத்தில் அனைத்து ரக பருத்தி விலை விபரம் (குவிண்டாலுக்கு) வருமாறு:எல்.ஆர்.ஏ., ரூ.3,000 முதல் ரூ.3,350 வரை, டி.சி.எச்., ரூ.4,400 முதல் ரூ.4,800 வரை, ஆர்.சி.எச்., மற்றும் பென்னி ரூ.3,000 முதல் ரூ.3,570 வரை, மட்டம் ரூ.1,600 முதல் ரூ.2,100 வரை.அவிநாசி கூட்டுறவு விற்பனை சங்க தனி அலுவலர் பழனிசாமி கூறியதாவது:இந்த வார பருத்தி ஏலத்துக்கு வரத்து அதிகரித்திருந்தது. திண்டுக்கல், பென்னாகரம், திருப்பத்தூர், உடுமலை, பொள்ளாச்சி, கிணத்துக்கடவு, கோபி, திங்களூர் பகுதிகளில் இருந்து விவசாயிகள் பருத்தியை கொண்டு வந்திருந்தனர். வரத்து அதிகரித்த நிலையில், டி.சி.எச்., ரகத்தின் ஆரம்ப நிலை கடந்த வாரத்தை விட, ரூ.300 அதிகரித்து ரூ.4,400 ஆக உயர்ந்தது. இந்த வாரம் ரூ.70 லட்சத்துக்கு மேல் வர்த்தகம் நடந்தது, என்றார்.

**இதுவரை 3,000 டன் நெல் கொள்முதல்**

திருப்பூர்: திருப்பூர் மாவட்டத்தில் அமைக்கப் பட்டுள்ள அரசு கொள்முதல் மையங்களில் இருந்து, இதுவரை 3,000 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது; அவை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக குடோனில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

திருப்பூர் மாவட்டத்தில் தாராபுரம், காங்கயம், உடுமலை போன்ற பகுதிகளி லும், டெல்டா மாவட்டங்களில் அறுவடை பணி தீவிரமாகியிருப்பதால், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் முக்கிய மான இடங்களில் கொள்முதல் மையங் களை ஏற்படுத்தி நெல் கொள்முதல் செய்து வருகிறது.கோவை, திருப்பூர், ஈரோடு மற்றும் கரூர் மாவட்டங்களில் அமராவதி மற்றும் திருமூர்த்தி அணை தண்ணீரை  பயன் படுத்தி நெல் சாகுபடி செய்யப்படுகிறது. அக்., மாதத்தில் துவங்கும் நெல் சாகு படி ஜன., - பிப்., மாதத்தில் அறுவடை பருவத்துக்கு வருகிறது.

இக்கால கட்டத் தில், டெல்டா மாவட்டங்கள் உள்ளிட்ட தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களி லும் அபரிமிதமான நெல் உற்பத்தி இருக் கும்; இவற்றை கொள்முதல் செய்வதற் காக, அரசு தரப்பில் கொள்முதல் மையங்கள் அமைக்கப்படும்.இந்தாண்டு எதிர்பார்த்த அளவு மழை பொழிவு இல்லாததால், பெரும்பாலான மாவட்டங்களில் நெல் சாகுபடி  தாமத மாக துவங்கியது. கடந்த பிப்., மாதத்தில் தான் தஞ்சை, திருவாரூர், நாகை உள் ளிட்ட டெல்டா மாவட்டங்களிலும், திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்களிலும் அறு வடை பணிகள் நடந்தன. அமராவதி மற் றும் திருமூர்த்தி அணை பாசன பகுதி களிலும் இதே கால கட்டத்தில் நெல் அறுவடை துவங்கியது.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 1, 200க்கும் மேற் பட்ட கொள்முதல் மையங்கள் மூலம், இந்தாண்டு 16 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்ய, தமிழக அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. திருப்பூர் மாவட்டத் தில் தாராபுரம், மடத்துக்குளம் போன்ற பகுதிகளில் கொள்முதல் மையங்கள் ஏற் படுத்தி, அரசு சார்பில் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. தாராபுரம், காங்கயம் மற்றும் உடுமலை பகுதிகளில் கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள், காங்கயம் ரோட்டில் உள்ள தமிழ் நாடு நுகர்பொருள் வாணிப கழக குடா னில் பாதுகாப்பாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. இதுவரை, 3,000 டன்னுக்கு மேல் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ள தாகவும், தொடர்ந்து கொள்முதல் மையங் களில் இருந்து நெல் வரத்து இருப்பதாக வும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

**நீர் வள நிலவளத் திட்டத்தில் துல்லிய பண்ணை கருத்தரங்கம்**

உடுமலை: உடுமலை அருகேயுள்ள குரல் குட்டையில் கோவை வேளாண்பல்கலைகழகம் சார்பில் நீர் வள நில வள திட்டத்தின் கீழ் துல்லிய பண்ணை திட்ட கருத்தரங்கு நடந்தது.

ஊராட்சி தலைவர் பன்னீர் செல்வம் தலைமை வகித்தார். வேளாண் பல்கலைகழக நீர் நுட்ப மைய பேராசிரியர் மாணிக்கசுந்தரம் பேசியதாவது: விளைநிலத்தில் தண் ணீர் தேவையை குறைத்து, விளைச் சலை அதிகரிக்க துல்லிய பண்ணை திட்டம் செயல்படுத்தப்படுகிறது.நீர் வள நில வள திட்டத்தின் கீழ் பல்கலைகழகம் சார்பில் கடந்தாண்டு உடுமலை பகுதியில் 25 எக்டேரில் காய்கறி பயிர்களுக்கும், 40 எக்டேரில் தென்னை சாகுபடிக்கும், 4 எக்டேரில் வாழைக்கும் மானியம் வழங்கப்பட்டுள்ளது. மானியத்தில் 60 சதவீதம் சொட்டு நீர் பாசனம் அமைக்கவும், பிற நிதி இடுபொருட்களாகவும் வழங்கப்படுகிறது.

துல்லிய பண்ணை திட்டத்தை பயன்படுத்தும் விவசாயிகள் நல்ல லாபம் பெறுகின்றனர். என்றார். இணை பேராசிரியர் ரவிக்குமார் காய்கறி பயிர்களுக்கு சொட்டு நீர் பாசன முறையில் ஏற்படும் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பது குறித்து பேசினார்.துணை பேராசிரியர் செல்வக்குமார், முதுநிலை ஆராய்ச்சியாளர் கலாமணி உட்பட பலர் பேசினர். துல்லிய பண்ணை திட்டத்தில் தக்காளி பயிரிட்டுள்ள நிலத்தில் விவசாயிகளுக்கு நேரடி விளக்கம் அளிக் கப்பட்டது.

**வெள்ளாடு வளர்க்கும் திட்டத்துக்கு அரசின் 'கருணை' தேவை!**

சுழற்சி முறையில் வெள்ளாடு வளர்க்கும் திட்டம், திருப்பூர் மாவட்டத்தில் கடந்த 2002 முதல் செயல்பாட்டில் உள்ளது; இதுவரை 470 பேருக்கு வெள்ளாடுகள் வழங்கப்பட்டுள்ளன; 45 லட்சம் ரூபாய் வருவாய் கிடைத்துள்ளது. கிராமப்புற பொருளாதார மேம்பாட்டுக்கு அடிப்படையாக உள்ள இத்திட்டத்துக்கு, தமிழக அரசு சார்பில் நிதி ஒதுக்கி, மாநிலம் முழுவதும் விரிவுபடுத்த வேண்டும்.

சுழற்சி முறையில் வெள்ளாடு வளர்க்கும் திட்டத்தை, திருப்பூர் கால்நடை பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி கழகமும், தமிழ்நாடு கால்நடை பராமரிப்பு மற்றும் விலங்கின பாதுகாப்பு பல்கலையும் இணைந்து கடந்த 2002ல் துவக்கின. இத்திட்டத்துக்கு அரசு சார்பு இல்லாத தனியார் தொண்டு நிறுவனங்கள் முகாம் நடத்த, அதிக அளவில் உதவின; தற்போதும் உதவுகின்றன. கிராமப்புற மற்றும் ஏழை பெண்களுக்கு உறுதியான வேலைவாய்ப்பை அளிக்கும் இத்திட்டத்துக்கு, அரசு தரப்பில் இதுவரை நிதி ஒதுக்கப்பட வில்லை.

திட்டத்தின் நோக்கம்: கால்நடை துறை சார்பில் ஒன்பது முதல் 12 வயதுடைய ஒரு பெட்டை ஆடு, ஆடு வளர்ப்பில் ஆர்வமுள்ள பெண்களிடம் கொடுக்கப்படும்; ஒன்றரை ஆண்டு ஆடு வளர்க்க, அவரே பொறுப்பாளர். குறிப்பிட்ட காலம் முடிந்த பின், வெள்ளாடு (பெட்டை) போடும் குட்டியை, கால்நடை துறையிடம் கொடுக்க வேண்டும். இதற்கான

உறுதிமொழி கடிதத்தில், ஆடு கொடுக்கும் போது, அப்பகுதி ஊராட்சி தலைவர் முன்னிலையில் கையெழுத்து பெற்றுக் கொள்ளப்படும்.பெட்டை ஆடு போடும் குட்டியை பெற்று, மற்றொரு கிராமத்தில் உள்ள ஏழை பெண்ணுக்கு வழங்கப்படும். அக்குட்டி கிடாவாக இருப்பின், அவற்றை உள்ளூர் சந்தையில் விற்று, அவற்றுக்கான மதிப்பை கால்நடை துறையிடம் தர வேண்டும்.

முதலில் போடப்படும் குட்டியை மட்டும், கால்நடை துறையினர் பெற்றுக் கொள்வர்; அதன்பின் போடப்படும் அனைத்து குட்டிகளும் முதலில் வெள்ளாடுகளை பெற்றுக்கொண்ட பெண்ணுக்கே சொந்தமாகும்.இத்திட்டத்தில், 2002ல் முத்தணம்பாளையம் பகுதியில் 25 பேர்; 2003ல் உகாயனூர் பகுதியில் 25; 2005ல் வரக்குட்டுப்பாளையம், சுல்தான்பேட்டை, பருவாய், பொல்லிக் காளிபாளையம் பகுதிகளில் 85; 2007 மற்றும் 2008ம் ஆண்டு முறையே 50 மற்றும் 141 ஆடுகள் வழங்கப்பட்டன; கடந்தாண்டு அதிகபட்சமாக இடுவாய், இடுவம்பாளையம், கணபதிபாளையம், வேட்டுவபாளையம், பெரியபுத்தூர், பூண்டி, கோபுனோரி, அரக்கடவு, பட்டிசாலை, கோடப்பட்டி, அரசூர் உள்ளிட்ட பகுதிகளில் 144 ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இதுவரை மாவட்டம் முழுவதும் 470 பேருக்கு வெள்ளாடுகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மொத்த மதிப்பு ஒன்பது லட்சம் ரூபாய்; இந்த ஆடுகள் மொத்தம் 2,400 குட்டிகள் வரை ஈன்று, அனைத்து குட்டிகளும் 36 லட்சம் ரூபாய் வரை விற்பனைக்கு வந்துள்ளன. முதலில் வழங்கப்பட்டுள்ள ஆடுகள், ஈன்ற குட்டிகள் என மொத்த மதிப்பு 45 லட்சம் ரூபாய் வரை வருவாய் கிடைத்துள்ளது.

கால்நடை ஆராய்ச்சி மற்றும் பல்கலை தலைவர் செல்வராஜ் கூறியதாவது:கிராமப்புற பெண்களுக்கு தொழில் தரும் திட்டமாக, சுழற்சி முறையில் வெள்ளாடு வளர்ப்பு திட்டம் அமைந்துள்ளது. இதனால் பயன் பெறும் கிராமப்புற பெண்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தற்போது, தனியார் அமைப்புகள் மூலமாகவே முகாம்கள் நடத்தப்படுகின்றன; முகாம் நடத்த போதிய நிதியில்லை. தமிழக அரசு சார்பில் குறைந்தபட்சம் ஐந்து கோடி ரூபாய் ஒதுக்கினால், இத்திட்டத்தை மாநிலம் முழுவதும் சிறப்பாக செயல்படுத்த முடியும். அனைத்து கிராமங்களுக்கும், இத்திட்டம் சென்றடையும். இவ்வாறு, செல்வராஜ் தெரிவித்தார்.கிராமப்புற பெண்களால் மட்டுமே ஆடு வளர்ப்பை தொழிலாக கொண்டு, வாழ முடியும். இளம்பெண்கள் நகரத்தை நாடி, வேறு தொழில்களுக்கு வந்த போதிலும், ஆர்வமுள்ள வயதானவர்கள் சொந்த ஊரில் பிழைத்துக் கொள்ள இத்திட்டம் சிறந்த வழி; குறைந்த முதலீட்டில் அதிக லாபம் தரும் இத்திட்டத்துக்கு அரசின் நிதியுதவி அவசியம்.

**உடுமலை வட்டாரத்தில் 'மக்காத' மஞ்சி தொழில் சுறுசுறுப்பு: கூடுதல் விலை கிடைக்குமா?**

மார்ச் 19,2010,00:00 IST



உடுமலை: உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில் தென்னை மட்டைகளிலிருந்து நார் பிரித்தெடுக்கும் தொழிற்சாலைகள் அதிகளவு இயங்கி வருகின்றன. இதில், வெள்ளை மஞ்சி மற்றும் பதப்படுத்தப்பட்ட மஞ்சி உற்பத்தி செய்யப்படுகிறது. தோப்புகளில் இருந்து மட்டைகளை கொள்முதல் செய்து, பீடர் இயந்திரம் மூலம் மூலப்பொருள் மஞ்சி உருவாக்கப்படுகிறது. இந்த மஞ்சியை தண்ணீர் தெளித்து ஒரு வாரத்திற்கும் மேலாக அம்பாரம் அமைக்கின்றனர். பின்னர், கீளினர், ஸ்கீரினர் இயந்திரங்களில் மஞ்சி நாராக உருவாக்கப்படுகிறது.

இந்த தொழிற்சாலைகள் கடந்த சில மாதங்களாக மஞ்சி நார் விலை குறைவால் பாதிப்பிற்குள்ளாகியுள்ளன. தொழிலாளர்கள் கூலி அதிகரிப்பு, மின்வெட்டு, மூலப்பொருள் விலை உயர்வு காரணமாக உற்பத்தி செலவு அதிகரித்துள்ள நிலையில் விலை சரிவு இத்தொழிலை தொடர்ந்து நடத்த முடியாத நிலைக்கு தள்ளி வருகிறது. தோப்புகளில் 4,500 மட்டை 1,800 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. இயந்திரங்களின் மூலம் மஞ்சி பிரித்தெடுக்கப்பட்ட பின் 30 கிலோ கொண்ட பண்டல்களாக கட்டப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. மெத்தை தயாரிப்பு உட்பட பல்வேறு பணிகளுக்கு அனுப்பப்படும் பதப்படுத்தப்பட்ட மஞ்சியின் விலை கடந்த மூன்று மாதங்களாக தொடர்ந்து சரிந்து வருகிறது. மஞ்சி பண்டல்கள் சீனாவிற்கு அதிகளவு ஏற்றுமதி செய்யப்பட்ட போது பண்டல் விலை 350 ரூபாய் வரை கிடைத்து வந்தது. டிசம்பர் முதல் ஏற்றுமதி குறைந்துள்ளதால் தற்போது 250 ரூபாயாக விலை குறைந்துள்ளது. பல மாதங்களாக விலை ஏறாததால் பல தொழிற்சாலைகள் தொடர்ந்து இயங்குவது கேள்விக்குறியாகியுள்ளது. இது குறித்து குடிமங்கலம் பகுதியை சேர்ந்த உற்பத்தியாளர்கள் கூறியதாவது: தென்னை நார் உற்பத்தி தொழில் பல்வேறு காரணங்களால் பாதிக்கப்பட்டு வருகிறது. மட்டைகளின் விலை தொடர்ந்து உயர்கிறது. டீசல் விலை உயர்வால் மூலப்பொருள் எடுத்து வரவும், உற்பத்தி பொருளை விற்பனைக்கு எடுத்து செல்லவும் போக்குவரத்து செலவு கூடுதலாகிறது.

சீனா ஏற்றுமதியை கொண்டு உள்ளூர் சந்தைகளில் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. 30 கிலோ பண்டல் 300 ரூபாய்க்கு விற்றால் மட்டுமே கட்டுபடியாகும். தொழில் சீராக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். விலை சரிவின் போது உற்பத்தி செய்த பண்டல்களை இருப்பு வைக்க கிடங்கு வசதி ஏற்படுத்த வேண்டும். வேளாண் உற்பத்தி பொருட்களுக்கு வழங்குவது போல் கிடங்கில் வைக்கப்படும் பொருளுக்கு பொருளீட்டு கடன் வழங்க வேண்டும். சிறு, குறு தொழில் பிரிவில் இயங்கும் தொழிற்சாலைக்கு மின் கட்டணத்தில் சலுகை அளிக்க வேண்டும்', இவ்வாறு தெரிவித்தனர். கை கொடுக்கும் 'வேஸ்ட் மஞ்சி': மஞ்சி விலை சரிவால் பாதிக்கப்பட்டுள்ள மஞ்சி மில்களுக்கு நார்

தயாரிக்கும் போது வெளியாகும் 'வேஸ்ட் மஞ்சி', நல்ல விலைக்கு செல்வதால் தொழிலுக்கு கைகொடுத்து வருகிறது.

நார் உற்பத்தியின் போது வெளியாகும் கழிவு மஞ்சி பித் பிளாக் தயாரிக்க பயன்படுகிறது. இந்த பிளாக்குகள் அதிகளவு வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. பிளாக்குகள் ஏற்றுமதி அதிகரித்துள்ளதால் மூலப்பொருளான வேஸ்ட் மஞ்சிக்கு நல்ல விலை கிடைக்கிறது. வேஸ்ட் மஞ்சி ஒரு கிலோ 1.30 ரூபாய் வரை கொள்முதல் செய்யப்படுகிறது. உற்பத்தி பொருளால் நஷ்டம் ஏற்பட்டு வரும் நிலையில் வீணாகும் கழிவுகளுக்காக உற்பத்தியாளர்கள் தொழிற்சாலையை நடத்தி வரும் அவல நிலை உள்ளது.
கிராக்கி அதிகரித்து வருவதால் வேஸ்ட் மஞ்சிக்கு தொடர்ந்து விலை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் உற்பத்தியாளர்கள் உள்ளனர்.

---

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

***உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 16.30%–ஆக குறைந்தது***




*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம், மார்ச் 6–ந் தேதி வரையிலான வாரத்தில் 16.30 சதவீதமாக குறைந்துள்ளது. இது, இதற்கும் முந்தைய வாரத்தில் 17.81 சதவீதமாக உயர்ந்து காணப்பட்டது.*
*இருப்பினும், இதே காலத்தில், எரிபொருள்களுக்கான பணவீக்கம் 11.38 சதவீதத்திலிருந்து 12.68 சதவீதமாக அதிகரித்துள்ளது. உற்பத்தி வரி அதிகரிப்பு மற்றும் பெட்ரோலிய பொருள்களின் விலை உயர்வால், எரிபொருள்களுக்கான பணவீக்கம் அதிகரித்துள்ளது.*
*கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், பருப்பு வகைகள், காய்கறிகள் போன்றவற்றின் விலை குறைந்திருந்தது. குறிப்பாக, காய்கறிகளின் விலை 10 சதவீதத்திற்கும் மேல் குறைந்திருந்தது. உளுந்து மற்றும் துவரம்*

பருப்பு ஆகியவற்றின் விலையும் தலா 6 சதவீதம் சரிவடைந்துள்ளதாக அரசு வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்ற பிப்ரவரி மாதத்தில், நாட்டின் ஒட்டுமொத்த பணவீக்க விகிதம் 9.89 சதவீதமாக அதிகரித்திருந்தது. பல பொருள்களின் விலை அதிகரித்து வருவதால், நடப்பு மார்ச் மாதத்தில் பணவீக்கம் இரட்டை இலக்கத்திற்கு அதிகரிக்கும் என மத்திய நிதி அமைச்சர் அண்மையில் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**ஆப்பிள் பயிரிடும் பரப்பளவு உயர்வு**



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நடப்பு நிதி ஆண்டில் நம் நாட்டில் ஆப்பிள் பயிரிடும் பரப்பளவு இரண்டு சதவீதம் அதிகரித்துள்ளது. சென்ற நிதி ஆண்டில் 2.74 லட்சம் ஹெக்டேரில் ஆப்பிள் பயிரிடப்பட்டிருந்தது. இது, இவ்வாண்டில் 2.80 லட்சம் ஹெக்டேராக உயர்ந்துள்ளது.

புதிய திட்டம்

உத்தரகாண்ட், இமாச்சல பிரதேசம், ஜம்மு–காஷ்மீர் ஆகிய மாநிலங்களில், ஆப்பிள் உள்ளிட்ட சில பயிர்களின் சாகுபடியை ஊக்குவிக்கும் வகையில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை மேம்பாட்டுக்காக புதிய தொழில்நுட்ப திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் காரணமாகவே ஆப்பிள் பயிரிடும் பரப்பளவு உயர்ந்துள்ளதாக வேளாண் துறைக்கான ராஜாங்க அமைச்சர் கே.வி. தாமஸ் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் மூலம் ஆப்பிள் உற்பத்தியை அதிகரிப்பதற்கும், பயிரிடும் பரப்பளவை விரிவுபடுத்துவதற்கும் உதவி அளிக்கப்படுகிறது. தரமான விதைகளை உற்பத்தி செய்யும் வகையில் நர்சரி தோட்டங்களை உருவாக்குதல், பழைய பழத் தோட்டங்களை சீரமைப்பு செய்தல், உரம் மற்றும் தண்ணீர் வசதி, பூச்சித் தடுப்பு முறைகள் போன்ற பல்வேறு அம்சங்களை இத்திட்டம் கொண்டுள்ளது.

பொதுவாக நம் நாட்டில் ஆண்டுக்கு 20 லட்சம் டன் ஆப்பிள் விளைகிறது. இதில், ஜம்மு–காஷ்மீர் மாநிலத்தின் பங்களிப்பு 13.32 லட்சம் டன் என்பது குறிப்பிடத்தக்கது. இமாச்சல பிரதேசத்தில் 5.10 லட்சம் டன்னும், உத்தரகாண்ட்டில் 1.32 லட்சம் டன்னும் உற்பத்தியாகிறது.

**_இயற்கை ரப்பர் விலை ரூ.150–ஐ தாண்டியது_**

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*கொச்சி*

*கடந்த சில மாதங்களாக இயற்கை ரப்பர் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இந்த நிலையில், சென்ற புதன்கிழமை அன்று, கொச்சி சந்தையில் ஒரு கிலோ ரப்பர் விலை ரூ.150–ஐ தாண்டியது. இது வரலாறு காணாத உயர்வாகும்.*

*நடப்பு ஆண்டு பிப்ரவரி மாதம் 25–ந் தேதி, ஒரு கிலோ ரப்பர் விலை ரூ.140.50–ஆக இருந்தது. இது, மார்ச் 1–ந் தேதி ரூ.142.50–ஆக உயர்ந்தது. இது, சென்ற புதன்கிழமை அன்று மேலும் அதிகரித்து ரூ.150.50–ல் நிலை கொண்டது.*

*இந்தியாவில் மட்டுமின்றி, உலக அளவில் ரப்பர் உற்பத்தி குறைந்து போயுள்ளது. அதேசமயம், தேவைப்பாடு பன்மடங்கு அதிகரித்துள்ளது. இதன் காரணமாகவே இயற்கை ரப்பர் விலை அதிகரித்து வருவதாக ரப்பர் வாரியம் தெரிவித்துள்ளது.*

*நியூயார்க் முன்பேர வர்த்தக சந்தையில், ஏப்ரல் மாத விநியோகத்திற்கான ஒரு கிலோ ரப்பர் விலை ரூ.154.15–ஆக இருந்தது.*

*இறக்குமதி*

*உள்நாட்டுத் தேவையை பூர்த்தி செய்யும் வகையில், இவ்வாண்டு 1.50 லட்சம் டன் ரப்பர் இறக்குமதி செய்யப்பட்டது. இந்த நிலையிலும் விலை குறையவில்லை.*

*சர்வதேச சந்தையில் ஒரு கிலோ இயற்கை ரப்பர் விலை, புதன்கிழமையன்று ரூ.148.20–ஆக இருந்தது. உள்நாட்டை விட வெளிநாட்டுச் சந்தைகளில் விலை மிகவும் அதிகரித்துள்ளதால் இறக்குமதி அதிக அளவில் மேற்கொள்ளப்பட வாய்ப்பில்லை என வர்த்தகர்கள் தெரிவித்தனர்.*

**_குன்னூர் உபாசியில் விவசாயிகளுக்காக தொழில்நுட்ப பூங்கா இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழக மண்டல இயக்குனர் தகவல்_**

*குன்னூர், மார்ச்.19–*

*குன்னூர் உபாசியில் விவசாயிகளுக்காக தொழில் நுட்ப பூங்கா அமைக்கப்பட உள்ளது என்று இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழக மண்டல இயக்குனர் டாக்டர் பிரபுகுமார் கூறினார்.*

*விவசாயிகள் விழா*

*தேயிலை வாரியம் உபாசி வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பில் தொழில் நுட்ப வாரம் உபாசி அரங்கில் நடத்தப்பட்டு வருகிறது.*

*விழாவில் இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழக த்தின் மண்டல இயக்குனர் டாக்டர் பிரபுகுமார் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார். அப்போது அவர் பேசியதாவது:–*

*இந்தியாவில் 572 மாவட் டங்களில் வேளாண்மை அறிவியல் நிலையங்கள் உள்ளன. விவசாயிகள் பயன் பெறும் வகையில் தகவல் மையம் அமைக்க திட்டமிடப் பட்டு முதல் கட்டமாக 200 மாவட்டங்களில் அமைக்கப் பட்டு உள்ளது. குன்னூர் உபாசி வேளாண்மை அறி வியல் மையத்தில் 25 லட்ச ரூபாய் மதிப்பில் தகவல் மை யம் அமைக்கப்பட்டுள்ளது.*

*தொழில்நுட்ப பூங்கா*

*தற்போது விவசாயிகளுக்கு கிடைக்கும் இரு பொருட்கள் தரமானதாக இருப்பது இல்லை. தரமான இடு பொருட்கள் கிடைக்க வேளாண்மை அறிவியல் நிலையம் நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாயிகளே இடு பொருட்களை தயாரித்து பயன்படுத்துவதற்கு உரிய பயிற்சியை அளிக்க வேண் டும்.*

*விவசாயம் சார்ந்த அனைத்து தொழில் நுட்பங் களையும் விவசாயிகள் அறிந்து கொள்ளும் வகையில் மாவட்டந்தோறும் தொழில் நுட்ப பூங்கா அமைக்க திட்ட மிட்டு உள்ளோம். இதனை உபாசி வேளாண்மை அறிவியல் நிலையத்திலும் அமைக்க உள்ளோம்.*

*தண்ணீர் பற்றாக்குறை*

*தட்பவெப்ப நிலை, நீர், நிலம், தொழிலாளர் பற்றாக் குறை ஆகியவைகளுக்கு ஏற்ப தொழில் நுட்பங்களை மாற்றி அமைத்து கொள்ள வேண்டும். நீலகிரி மாவட்டத்தில் தண்ணீர் பற்றாக்குறை உள்ளது. இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகம் சார்பில் தண்ணீரை எவ்வாறு பயன் படுத்த வேண்டும் என்பது குறித்த தொழில் நுட்ப பயிற்சி மையத்தை 10 லட்ச ரூபாய் நிதியில் ஆரம்பிக்கப்பட உள்ளது.*

*கர்நாடகா மாநிலத்தில் ஒரு ஏக்கராவில் துவரம் பருப்பு 5 முதல் 6 குவிண்டால் தான் மகசூல் எடுத்து வந்தனர். புதிய விவசாய தொழில் நுட்பத்தின் மூலம் ஏக்ராவிற்கு 7 முதல் 10 குவிண்டால் வரை மகசூல் எடுத்து வருகின்ற னர். தட்ப வெப்ப நிலை இனி வரும் 10 முதல் 20 ஆண்டு களுக்கு இதே போன்று தான் இருக்கும். இதற்கு ஏற்றவாறு புதிய தொழில் நுட்ப முறைக்கு மாற வேண்டும்.*

*இவ்வாறு அவர் பேசினார்.*